www.tamilarangam.net

Raya

# மனிதம்

RAYA
87 RUE DE COLOMBE:
92600 ASNIERES SUR
-SEINE ; FRANCE




Sep.89

(1)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிவப்பு மின்னல்கள்

சூரியக் குஞ்சுகள் நாம்!
சுடர்விட்டு பிரகாசிக்க
மக்கள் புரட்சி செய்வோமென
முடிக்க விட்ட சிவப்பு மின்னல்கள்
இன்று,
இனத்தின் அழிவைக் குறிக்கும்
வால் நட்சத்திரங்கள்!

மக்கள் பணத்தில் வந்த
தானியங்கி துப்பாக்கிகள்
மக்கள் தலைக்கே
மகுடம் சூட்டுகிறது.

மரபு காக்கும் மறவரென
மார் தட்டிய மறவர்கள்
ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு
ஆலவட்டம் பிடிக்கிறார்கள்.
மக்கள் கைகள் ஓங்கும்!
அப்போ,
மாழப் போவது
இவர்களும் தான்!

— யதார்த்தினி

www.tamilarangam.net

# மனிதம்!



மரப்பிழக்கும்
இரும்புக் கிழாய்க்கும்
மனிதாபிமானம் இருக்க
நியாயமில்லைத்தான்
அதற்காக
மனிதந் தொலைக்குமா ?

பல வருடங்களாக நடமாடும் சுதந்திரத்தை இழந்து பேச்சுரிமை மறுக்கப்பட்டு இன்று உறங்குவதற்குக்கூட உரிமையற்ற நிலையில் எங்கள் மக்கள் அவதியுறுகிறார்கள்.

இவ் அவலங்களை நேரடி உரையாடல் மூலமோ பத்திரிகை வாயிலாகவோ அல்லது கலை - இலக்கிய வடிவங்களிலோ வெளிக்கொணர்வதற்குரிய ஜனநாயக உரிமைகள் கூட எங்கள் தேசத்தில் மறுக்கப்பட்டிருக்கிறது.

A.K 47 இனதும் ஏனைய பல ரக ஆயுதங்களினதும், இராணுவப் படைகளினதும் அதிகார வெறி நிலைக்கேற்ப குருதி வெள்ளத்தினுள் செலுத்தப்பட்டிருக்கிறது. எங்கள் தேசம்!

அந்நிய தேசங்களில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் எங்கள் நிலைமை;

ஒழுங்கான வேலையும், ரூபாய்க் கணக்கில் முப்பது நாற்பது ஆயிரம் -

www.tamilarangam.net

என்று அனைத்தையும் பெறுவதாக நினைத்தும் பிறந்தநாள் சாமத்திய சடங்குகள் திருமண வைபவங்கள் கொண்டாடுவதனூடும் நிறைவான கோலாகலமாக வாழ்வைப் பெற்றுவிட்டதாக பிரமையடைகிறோம்.

ஆனால் உண்மை நிலை ----------?

ஐரோப்பாவின் இயந்திர வாழ்வுடன்; எங்கள் வாழ்வியலுடன் எந்த விதத்திலும் பொருந்த முடியாத சமூக புவியியல் சூழ்நிலையுடன்; நிர்ப்பந்தமாக எம்மை இணைத்திருக்கிறோம்.

ஓர் சமூகமாக ஒன்றிப்பதற்குத் தகுதியற்றவர்களாக இருக்கின்றோம். பல பத்து வருடங்கள் சென்றாலும் அரசியல் தஞ்சம் பெற்றவர்கள் உட்பட அனைவருமே இந் நாடுகளின் அரசியல் அந்தஸ்தை அதற்கான உரிமைகளை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

மறுபுறம்; கிட்லரினால் ஆரம்பித்து வழிநடத்தப்பட்ட தேசிய வெறியும் நிறப் பாகுபாடும் கொண்ட நாசிசக் கொள்கை புத்துயிர் பெற்று எம்மைத் துரத்திக் கொண்டிருக்கிறது.

எங்கள் பிள்ளைகளின்; சிறார்களின் நிலைமைகளோ வித்தியாசமானது. மேலும் சிக்கலானது! மேற்கத்திய சமூக வாழ்வுடன் தம்மை முழுமையாக இணைத்துக் கொள்ள முடியாமலும், எங்கள் நாட்டுக்குத் திரும்பிச் சென்றும் சந்தர்ப்பத்தில் எங்கள் சமுதாய வாழ்வை பூரண

www.tamilarangam.net

மாக அங்கீகரிக்க மனமின்றியும், போதிய தமிழ் அறிவைப் பெற்றுக் கொள்ளாமையினாலும் எதிர்காலத்தில் விரக்திக்குட்பட்டுச் சீரழிந்து செல்லக்கூடிய நிலைமைகளில்தான் எங்கள் சிறார்கள் இங்கு வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் அந்நிய மண்ணில் எங்களுக்கு எங்கள் குழந்தைகளுக்கு என்று ஓர் எதிர்காலம் அற்ற திறந்தவெளிச் சிறைக் கைதிகளாகவே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மேலும் இதை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் சுவிற்சர்லாந்து அரச மட்டங்களில் இருந்து வெளிவந்துள்ள கூற்று ஒன்றைப் பாருங்கள் !

« தமிழ் அகதிகளை நாம் திருப்பி அனுப்பக்கூடிய சூழ்நிலை அங்கு இல்லை. அதே வேளை அவர்களுக்கென்று ஓர் எதிர் காலமும் இங்கில்லை »

சொந்த மண்ணிலும், அந்நிய தேசங்களிலும் எங்கள் நிலைமைகள் இப்படி இருக்கும்போது எங்கள் எதிர்காலம் பற்றிய சிந்தனைப் போக்குகளை வளர்த்துக் கொள்ளவும், கருத்துப் பரிமாறல்களை மேற்கொள்வதற்குமான அவசியமும் தேவையும் எம்மை நெருக்கிக் கொண்டிருக்கிறது.

அத்தகைய நெருக்குவாரத்தில் பிறந்த ஓர் விஞ்ஞான சாதனம்தான் "மனிதம்" மாதப் பத்திரிகை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகவே காட்சிகளுக்காக காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் "மனிதம்" வீடியோ பத்திரிகையை ஒரு ஒழுங்கு முறையில் கொண்டு வருவதற்குத் தடையாக உள்ளது. அத்தோடு நாம் உணர்ந்தவை நிறை முழுமையாக பிரதிபலிக்க முடியாமல் இருப்பதற்கும் காரணமாக இருப்பது காட்சிப் பற்றிக் குறைகளே!

இக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் "மனிதம் வீடியோ பத்திரிகையின்" ஓர் சகோதர சஞ்சிகைதான் **மனிதம் !**

---

## மனிதம் 3

வீடியோ பத்திரிகை

- ★ விண்வெளியில்...
- ★ திரைப்பட விமர்சனம்
- ★ நெருப்புக்குள் பெண்கள்
- ★ சுவிஸில் தமிழ் அகதிகள் மீது தாக்குதல்

### பிந்திய செய்தி:

**இலங்கை – இந்திய அரசுகள் சமரசம்?**

இந்தியா இவ்வருட முடிவிற்குள் (1989 டிசம்பர் 31க்குள்) தமது படைகள் முழுவதையும் (அவர்கள் கணக்குப்படி 41000) இலங்கையில் இருந்து வாபஸ் பெறுவதாக இலங்கை அரசுடன் 18.9.89 திங்கள் அன்று ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது. இந்தியப் படைகள் 20.6.89 காலை 6 மணியிலிருந்து போர் நிறுத்தத்தை அமுல் படுத்துவதாகவும் அறிவித்துள்ளது.

www.tamilarangam.net

# வளர்த்த கடா மார்பில்...!

"முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட அரசியல் அனுபவம் மிக்க மூத்த தமிழ்த் தலைவர்; சர்வதேச அரசியல் அரங்கில் நன்கு அறியப்பட்ட ஈழத் தமிழர்களின் பாதுகாவலன்; ஓர் படித்த மனிதன் திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களை இழந்துவிட்டோம்" என்று அரசியல் வட்டாரங்கள் அரசியல் பிரதிநிதிகள், எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் ஆகிய பலரும் மிகுந்த கவலை தெரிவிக்கின்றனர்

"தமிழ் இளைஞர்களின் உணர்வுக்கு மதிப்பளித்த அகிம்சைக்கும், கிம்சைக்கும், பாலமாக நின்றவர்; அரசியல் வாழ்வுக்கு வந்து தனது வீடு முதல் சொத்துக்கள் பலவற்றையும் இழந்தவர்; தமிழ் இளைஞரின் எதிர்கால அரசியல் தலைவர் திரு வெ. யோகேஸ்வரன் அவர்கள்" என்ற புகழாரங்களுடன் அனுதாபச் செய்திகள் வெளிவந்துள்ளன.

"தமிழ் இளைய தலைமுறைத் தலைவர் திரு. உமா மகேஸ்வரன் அவர்களின் இறப்பு இளைய தலைமுறைக்குப் பெரும் இழப்பு" என்று கவலையடைந்தோர் பலர்.

தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியுடன் இணைந்து தமது அரசியல் வாழ்வை ஆரம்பித்து 1956 ம் ஆண்டு வட்டுக்கோட்டைப் பிரதிநிதியாகப் பாராளுமன்றம் சென்றார் திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள்.

அப்போது வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அதி செல்வாக்குப் பெற்றிருந்த இரு கட்சிகள் திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களின் தமிழ் காங்கிரஸ், S.J.V

www.tamilarangam.net

செல்வநாயகம் தந்தை அவர்களின் தமிழரசுக்கட்சி.

தெற்கில் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த இரு கட்சிகள் டட்லி சேனநாயக்கா, ஜே. ஆர் ஜயவர்த்தன போன்றோரின் ஐக்கிய தேசியக் கட்சி (U.N.P), S.W.R.D பண்டாரநாயக்கா அவர்களின் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி (S.L.F.P). இரண்டுமே வகுப்புவாதத்தை, இனவெறியை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தவை என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் தேசியரீதியில் இவ் இரண்டு கட்சிகளுக்கும் இடையில் பெரும் வேறுபாடு இருந்தது. U.N.P தரகு முதலாளிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய விதேசியக் கட்சியாகத் தம்மை வெளிக்காட்டிக் கொண்டது. ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தேசிய முதலாளிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தித் தேசியக் கட்சியாக விளங்கியது.

தமிழர் கட்சிகள் இரண்டுமே அன்று தொடக்கம் தரகு முதலாளித்துவத்தின் செல்லப்பிள்ளையாக விதேசியக்கட்சியான U.N.Pக்கே முண்டு கொடுத்து வந்துள்ளன. இதன் மூலம் தமிழ் காங்கிரஸ் மட்டுமன்றி, தமிழரசுக் கட்சியினதும் திரு. அமிர்தலிங்கம் அவர்களினதும் விதேசியப்போக்கும், துரோகத்தனமும் அன்றே ஆரம்பித்த ஒன்றாகும்.

தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் உத்தியோகம் பார்க்கும் நடுத்தர வர்க்கத்தையே முழுமையாகப் பிரதிநிதித்துவப்படுத்தியது. அந்த அடிப்படையில் உத்தியோகம் பார்ப்பதற்கு முட்டுக்கட்டையாக இருக்கக் கூடிய மொழி ரீதியான பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்தது, அவர்களுக்கான சலுகைகளைப் பெற்றுக்கொடுப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தது என்பது உண்மையே.

www.tamilarangam.net

திரு அமிர்தலிங்கம் அவர்கள் 1958 ம் ஆண்டு சிங்கள 'ஸ்ரீ' ஒழிப்புச் தார்பூசி அழிக்கும் இயக்கத்தைத் தொடங்கியதன் மூலம் தென்பகுதி ஜே. ஆர் ஜெயவர்த்தன, கே. எம். பி ராஜரத்தின போன்றோரின் சிங்கள இனவெறிக்குப் பதிலான தமிழ் இனவெறியைத் தூபமிட்டார்.

1963 ம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்து, இராணுவத்தின் குண்டாந்தடிப் பிரயோகத்தில் இரத்தம் கசிந்த நிலையில் ஜீப் வண்டியில் ஏற்றிச்செல்லப்பட்டுச் சிறை வைக்கப்பட்டதன் மூலம் தமிழ் மக்களின் தியாகி ஆகினர்.

1965 ம் ஆண்டு U·N·P அரசு ஆட்சிக்கு வந்தது. தமிழரசுக்கட்சியின் சார்பில் திரு. திருச்செல்வம் அவர்கள் உள்ளூராட்சி அமைச்சரானார். தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் உப சபாநாயகர் ஆனார்.

1966 — 1969 காலப் பகுதியில் யாழ் குடாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்கள் தீண்டாமைக்கு எதிரான ஆலய, தேனீர்க்கடைப் பிரவேசப் போராட்டங்களை நடத்தியவேளை, திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் ஆதரவாக ஒரு குரல் எழுப்பாதது மட்டுமல்ல, அவரின் தொகுதியில் சங்கானையில் சாதி வெறியர்களுக்கு எதிராகத் தாழ்த்தப்பட்ட மக்கள் நடத்திய போராட்டத்தைப் பற்றிப் பாராளுமன்றத்தில் « சங்கானையில் புதிய வியட்நாம் » என்று கேலி செய்தார். சிங்களவரான S. D. பண்டார நாயக்கா மட்டும் தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பிய ஒரே ஒரு

www.tamilarangam.net

எம்பியானார். இதன் வெளிப்பாடு 1970ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழரசு, தமிழ் காங்கிரஸ் இரண்டினதும் செயலாளர் நாயகங்கள் (அமிர்தலிங்கம், சிவசிதம்பரம்) இரண்டும் படு தோல்வியுற்றன.

1972ம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அரசினால் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் முறை தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழகப் பிரவேசத்துக்குத் தடையாக அமைந்தது. இளைஞர் மத்தியில் போராட்ட உணர்வு முளைவிட ஆரம்பித்ததை உணர்ந்த அமிர்தலிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கி, தனி நாட்டுக் கோரிக்கையை முன் வைத்து, இளைஞர் உணர்வுகளைத் திசை திருப்பினார். தமிழ் வாலிபர் மத்தியில் அராஜகப்போக்கும், பாசிச நடவடிக்கைகளும் தோற்றமெடுப்பதற்கு மறைமுகமாக ஊக்கமளித்தார்.

இவருடைய போராட்ட நடவடிக்கைகள் அனைத்தும் U.N.P அரசில் முடங்குவதும், ஸ்ரீலங்கா அரசில் விஸ்வரூபம் எடுப்பதுமாகவே இருந்து வந்துள்ளது.

1977ம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கென்று தமிழர் விடுதலைக் கூட்டணியினால் முன்வைக்கப்பட்ட 'தனி நாடு' கோசம் பேரலையாக வீசியது. விடுதலைக் கூட்டணி பெரும்பான்மையான வாக்குகளுடன், அதிகப்படியான ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது.

U.N.P $\frac{2}{3}$ பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தது. விடுதலைக் கூட்டணியின் U.N.P சார் உணர்வானது அவரவருக்கெதிராகப் போர்க்கொடி

www.tamilarangam.net

தூக்கத் தடையாக இருந்தது. இதேவேளை இளைஞர்களின் கேள்விக்குப் பதில் கொடுக்க முடியாத நிலையில் வட்ட மேசை போன்ற மாநாடுகள் அடிக்கடி கூட்டியது. இச் சந்தர்ப்பத்தில் தமது பாதுகாப்புக் கருதி இளைஞர் மத்தியில் வன் செயலுக்கு வலுவூட்டினார். தமக்கு ஆபத்தாகக் கருதியவர் மீது கடும் நடவடிக்கை எடுத்தார்.

1981ல் தனிநாட்டுக்குப் பதிலாக மாகாண சபையை விடுதலைக் கூட்டணி ஏற்றுக்கொண்டது. 1983 இனக்கலவரமும், சிறைப்படுகொலைகளும் தமிழ் இளைஞர் இயக்கங்களின் வளர்ச்சியைத் தீவிரப்படுத்தின. U.N.P அரசுடன் உறவைத் தொடர்வதற்கு இயக்கங்கள் தடையாக இருந்தன. விடுதலைக் கூட்டணி உயிர் ஆபத்தை உணர்ந்தது. திரு. அமிர்தலிங்கம் அவர்கள் இந்தியா சென்று, எம்.ஜி.ஆர் இந்திரா காந்தி போன்றோருடன் ஒரு சமரசத்திற்கு வந்தார். திரு. மு. சிவசிதம்பரம் உட்பட கூட்டணித் தலைவர்களும், அமிர்தலிங்கமும் இந்தியாவில் தங்கிக்கொண்டு, பத்திரிகை அறிக்கைகள் மூலம் தமது அரசியல் நடவடிக்கைகளைத் தொடர்ந்தனர்.

இறுதியாக, தன்னால் வளர்த்துவிடப்பட்ட பாசிசக் கிழுக்களே தமது அரசியல் தலைமைத்துவ வாழ்வுக்குத் தடையாக இருப்பதை உணர்ந்தார். இந்திய இராணுவத்தின் மூலம் மறைந்து போன தமது அரசியல் வாழ்வைப் புதுப்பிக்க முனைந்தார். ஏனைய «துரோகக் கும்பல்களையும்» இணைத்துக் கொண்டு அந்திய

www.tamilarangam.net

அமைதிப்படை என்ற அந்நிய ஆக்கிரமிப்புப் படையின் நுழைவுக்குக் கால்கோளாக அமைந்துவிட்டார். இதன் மூலம் ஜே. ஆர் ஜெயவர்த்தனவுக்குச் சமமான, வரலாற்றில் அழித்துவிட முடியாத தேசத்துரோகத்தை இழைத்துவிட்டார் திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள்.

★ ★ ★

தமிழ் மக்கள் அறிந்தவரை 1977ம் ஆண்டு பொதுத்தேர்தலுடன் அரசியல் வாழ்க்கு வந்து, கூட்டணியின் 'தனிநாட்டு' அலையுடன் யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராக வெற்றிபெற்றார் திரு வெ. யோகேஸ்வரன் அவர்கள். தமிழ் இளைஞரின் தீவிர நடவடிக்கைகளுக்குத் துணையாக நின்றவர் என்ற சந்தேகத்தில் 1981ம் ஆண்டு யாழ்ப்பாணம் பொதுநூல் நிலயத்துடன் சேர்த்து இவருடைய வீடும் இராணுவத்தால் முற்றுகை எரிக்கப்பட்டது.

இவர் தமிழ் இளைஞர்களின், இளைஞர் இயக்கங்களின் உணர்வுகளை ஓரளவு புரிந்து கொண்டவர். இளைஞர்களால் மதிக்கப்பட்டவர். இதனால் சில சந்தர்ப்பங்களில் விடுதலைக்கூட்டணிக்கும், இளைஞர் இயக்கங்களுக்கும் இடையில் ஓர் தொடர்பு பாலமாக விளங்கினார். ஆனால் இவருடைய செயற்பாடுகள் அனைத்தும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் கூட்டுக்குள் இருந்து விடுபட முடியாதவையாகவே அமைந்தன.

★ ★ ★

விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தமது தீவிர அரசியல் வாழ்வை ஆரம்பித்து, புலிகளில்

www.tamilarangam.net

இருந்து பிரிந்து சென்று "தமிழீழ விடுதலைக் கழகத்தை" ஆரம்பித்தார் திரு உமா மகேஸ்வரன் அவர்கள்.

வசந்தன் என்று அழைக்கப்பட்ட சந்ததியாரும், அவரைச் சார்ந்தோர் சிலரும் உள்வாங்கப் பட்டதனாலோ, என்னவோ கழகம் «மாக்சிசப்» போக்கை வெளிக்காட்டியது. உமா மகேஸ்வரனின் எளிமையான வாழ்க்கை முறையும், ஏனைய தந்திரோபாயமான அம்சங்களும் இவரை இளைய தலைமுறைத் தலைவர்களில் ஒருவராக்கியது.

ஆனால் கழகத்தின் திரைமறைவில் இளைஞர்களுக்கும், கழகப் போராளிகளுக்கும் அவராலும், இவரது சகாக்களாலும் இழைக்கப்பட்ட கொடுமைகள் கொஞ்சநஞ்சமல்ல. கழகத்தில் இவருடைய கருத்துக்களை எதிர்ப்பவர்களுக்கு ஜனநாயகம் மறுக்கப்பட்டது. குறிப்பாக சந்ததியாரின் நேர்மையான அரசியல் செயற்பாட்டில் பெரும் ஆத்திரங்கொண்டிருந்தார் திரு உமாமகேஸ்வரன் அவர்கள். போராளி இளைஞர் பலர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டனர். பலவித உயர்ரக பொறிமுறைகளைக்கொண்ட சித்திரவதைகளைக் கையாண்டதன் மூலம், விடுதலைக்குத் தம்மை அர்ப்பணிப்பதாக நினைத்துக் கழகத்தில் இணைந்த புதிய தலைமுறை இளைஞர்களின் போராட்ட விடுதலை உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்டன. பல இளைஞர்கள் உடலும், உள்ளமும் பாதிக்கப்பட்ட நிலையில் மன நோயாளிகள் ஆக்கப்பட்டனர்.

இதில் மனித நேயம் கொண்டவர்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதயத்தை நொறிக்கும் சம்பவம் சந்ததியாரின் கொலை. ஒரு கம்பினால் கண்கள் தோண்டப்பட்டு, உடல் கிழித்துக் கிழிக்கப்பட்டு, கை கால்கள் துண்டம் துண்டமாக வெட்டப்பட்டு, அடையாளம் காணமுடியாத அளவுக்கு முகம் கோரப்படுத்தப்பட்ட நிலையில் சதைப்பிண்டமாக கல்லில் கட்டப்பட்டு நடுக்கடலில் வீசப்பட்டார் சந்ததியார் அவர்கள்.

இக்கோரக்கொலை சார்பாகத் தமிழக அரசினால் கைதுசெய்யப்பட்ட உமாவின் சகாக்கள் ஆறுபேர், எம்.ஜி.ஆருடன் நேரடியாகப் பேசியதன் மூலம் திரு. அமிர்தலிங்கம் அவர்களினால் விடுவிக்கப்பட்டனர் என்பது கவலைக்குரிய குறிப்பான விசயமாகும்.

சுருங்கக் கூறின்; ஒரு இளைய தலைமுறையின் விடுதலை உணர்வுகளை, செயற்பாடுகளைச் சீரழித்து இந்திய ஆக்கிரமிப்பாளரின் நலனுக்குத் துணை நின்று; எமது இனத்தின், தேசத்தின் விடுதலைக்குக் குந்தகமாய் அமைந்த திரு. உமாமகேஸ்வரன் அவர்களின் துரோகத்தனங்களைத் தமிழ் மக்கள் வரலாறு இலகுவில் மறந்துவிட முடியாது.

தமிழ் இளைஞர்களிடையே திரு. அமிர்தலிங்கத்தினால் தீனி போடப்பட்ட பாசிசம் யாழ் முதல்வர் திரு அல்பிரட் துரையப்பா, நல்லூர் எம்.பி. அருளம்பலம் போன்றோரது கொலைகளுடன் அரங்கேறியது. சிங்களக் கட்சியைச் சார்ந்ததனால், தமிழர் மத்தியில் நிலவிய இனவாத ரீதியான தர்க்கவியல் அவர்களது கொலைகளை ஓரளவு நியாயப்படுத்தியது. ஆனால் தமது அரசியல் வாழ்வுக்கு

www.tamilarangam.net

முற்றுப்புள்ளி வைக்கக்கூடியதாக இருந்த தமிழ் இளைஞர் குழுக்கள் மீதும் இதே பாசிச மின்சாரம் பாய்ச்சி விடப்பட்டமை, தமிழ் மக்கள் எதிர்பாராத ஒன்றாகும்.

குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் போன்றோர் கைது செய்யப்பட்டனர். 1982ம் ஆண்டு "புதிய பாதை" பத்திரிகை ஆசிரியர் சுந்தரம் அவர்கள் இதே பாசிச வெறியர்களினால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். இதே கழுகுக்கண்கள் மேலும் பல தமிழ் இளைஞர்களைக் குறி பார்த்தது.

தமிழ் இளைஞரிடையே பாசிசத்தைத் தோற்றுவித்தவர்கள்; பாசிசத்திற்கு வலுவூட்டியவர்கள்; இன்று அதே பாசிச வெறிக்குப் பலியாகிவிட்டார்கள் ஆம், அமிர்தலிங்கம், உமா மகேஸ்வரன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

எங்கள் தேசத்தில் இவர்கள் மட்டும் தான் பாசிசத்தின், துரோகத்தனத்தின் காவலர்களா? இல்லை, இவர்களைக் கொலை செய்தவர்களும் பாசிச வெறியர்கள்தான். «மக்களின் பாதுகாப்பு» என்று கூறிக்கொண்டு அந்நியப்படைகளை நிலைகொள்ளச் செய்பவர்கள், மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டு, கண்டுக்குத் தெரியாமல் மக்களை அழிப்பவர்கள்; 'தேச விடுதல்' என்று கூறி ஜனநாயக சக்திகளின் நடமாட்டத்தைத் தடுப்பவர்கள், ஐக்கியத்தை மறுப்பவர்கள்; ஆகிய அனைவருமே பாசிசத்தின், துரோகத்தனத்தின் பாதுகாவலர்கள் தான்.

வரலாறு பலரைத் தலைவராக்கிறது

விஞ்ஞானம் :

# உயிரினங்களின் தோற்றம்

ஆரம்பத்தில் பூமியானது வெப்பக்கோளமாகக் காணப்பட்டது என்பதே பூமியின் தோற்றம்பற்றிய கருத்தாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. படிப்படியாக ஏற்பட்ட பௌதிக மாற்றத்தினால் வெப்பநிலை குறைந்து மேற்பரப்பானது குளிர்ச்சியடைந்தது. இதற்கு ஆதாரமாக பூமியின் மையப் பகுதியானது இப்போதும் வெப்பமாகக் காணப்படுவதாக விஞ்ஞான ஆய்வுகள் கூறுகின்றன. பூமியின் மேற்பரப்பு குளிர்ச்சியடையும் போது நீராவியில் இருந்து இறுக்கமடைந்து நீர்நிலைகளும் தோன்றின. இவை பல கால இடைநிலைகளினூடாக ஏற்பட்ட மாற்றங்களாகும். இதன் பிந்திய நிலைகளில் ஏற்பட்ட பௌதிக, இரசாயன மாற்றங்கள் பல முக்கியமான சூழல் மாற்றங்களை ஏற்படுத்தியது. குறிப்பாக உயிரினங்களின் தோற்றத்திற்கு வழிவகுத்தது.

வளியில் காணப்பட்ட காபன், ஐதரசன், ஒட்சிசன், நைதரசன், (சில உப்புக்கள்) போன்ற மூலகங்களின் பௌதிக இரசாயன ஒன்று சேர்ப்பின் ஊடாக தோற்றம் பெற்ற D.N.A ன் அமைப்பே (டீ.ஒட்சி றைபோஸ் நியூக்கி-ளிக் அமிலம்) உயிரினத்தின் தோற்றமாக அமைந்தது. எந்த ஒரு உயிரினத்தின் கலத்திலும் காணப்படும் கருப்பொருள் D.N.A ஆகும். எனவே D.N.A ன் தோற்றம் ஒருகல அங்கியின் தோற்றமாக அமைந்தது. D.N.A சிறப்புத் தன்மையாக சுயமாக பகுப்பிக்கும் சிறப்புச்செய்முறை காணப்பட்டது. அதாவது அமைப்பிலும், அளவிலும் தன்னை ஒத்த இன்னோர் உருவை (அமைப்பை) உருவாக்கும் தன்மை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வியக்க வடிவத்தை D.N.A பெற்றமையே உயிரற்ற பொருளில் இருந்து உயிர் பொருள் தோன்றுவதற்கு சிறப்பம்சமாக அமைந்தது. அத்துடன் பல கல நிலையுடைய இழைய அமைப்பு தோன்றவும் வழிவகுத்தது.

அதாவது இந்த "கலம்" எனக்குறிப்பிடுவது ஓர் உயிர் உள்ள அங்கியின் அடிப்படை நிகழ்வுகளை (தொழிற்பா நிகழ்த்தக் கூடிய அலகுச்சிறப்புடையதையே. இக்கலமானது கருவையும், கருவை சூழவுள்ள குழியவுரு என்னும் பகுதியையும் கொண்டிருக்கிறது. மையத்தில் காணப்படும் கருவிலேயே இயல்புகளை தாங்கிச்செல்லும் நிறமூர்த்தங்கள் காணப்படுகின்றன. அதாவது D.N.A., R.N.A காணப்படுகிறது. இந்த D.N.A ன் வேறுபட்ட, சிக்கலான பொதிக இரசாயன அமைப்பே அங்கியின் இயல்புகளை நிர்ணயிக்கிறது. [உடல் தோலின் நிறம் ஓர் இயல்பு] இதேபோன்றே ஓர் தாவரத்திலும் "கலம்" என்னும் அமைப்பு காணப்படுகிறது. ஆனால் தாவர, விலங்குக் கலங்கள் சில முக்கியமான தன்மைகளில் வேறுபட்டுள்ளன. அதாவது தாவரக் கலத்தில் காணப்படும் செலுலோஸ் என்னும் பொருளால் உருவாக்கப்பட்ட கலச்சுவர் என்னும் பகுதி விலங்குக்கலத்தில் காணப்படுவதில்லை. விலங்குக் கலத்தில் காணப்படும் ஒளித் தொகுப்பு செய்முறைக்குத் தேவைப்படும் பச்சையமான இலைபோகணம், கலப்பிரிவில் முக்கிய பங்கேற்கும் புன்மையத்தி போன்றவை தாவரக் கலத்தில் இருப்பதில்லை. மேற்குறிப்பிட்ட வேறுபாடுகளைத் தவிர தாவர, விலங்குக் கலங்களில் அநேகம் ஒற்றுமைகள் காணப்படவே செய்கிறது.

இவ்வாறு தோற்றம் பெற்ற கலங்களை தற்போது

www.tamilarangam.net

காணப்படும் உயர்வகை விலங்குகளியும் . உயர்வகை தாவரங்களியும் தோற்றங்களை வைத்து முன்னோடிகளாகும். பல்வேறுபட்ட இயற்கைச் சூழல்கள், இச் சூழல்களில் தொடர்ந்து ஏற்பட்ட மாறுதல்கள் (மாற்றம்) இம்மாறுதல்களுக்கேற்ப சாதிகள் தம்மை இசைவாக்கப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் ஒரு சாதி பெற்ற வெற்றியை போன்று இன்னொர் சாதி பெற முடியவில்லை. இந்த நிலைமையே பல புதிய சாதிகள் படிப்படியாக தோன்றுவதற்கு வழிவகுத்தது.

உயர் வகை விலங்குகளின் தோற்றமானது பல படிகள் நிலைகளூடாக மிக நீண்டகால இடைவெளியில் நடந்தேறியுள்ளது. முதல் தோன்றிய அல்பியுமின் [ALBUMINOUS] திரவநிலையும், கருவையும் கொண்ட கலமானது சுயமாக தனக்கேற்ற சூழலில் வாழ்ந் து கொண்டது. உணவை உள்ளெடுத்தல், சுவாசம், கழிவகற்றல், இனப்பெருக்கம் போன்ற செய்முறைகளை தானே செய்து கொண்டது [உ-ம் அமீபா, பரமேசியம், கிளமிடோமொனஸ்] இந்த இனப்பெருக்கம் பிளவு முறைமூலம் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு பிளவுமுறை மூலம் பெறப்பட்ட புதிய கலமானது தாய்க்கலத்தில் இருந்து விலக்கப்பட்டு தனியாகவே வாழத்தொடங்கியது. பிந்திய காலங்களில் ஏற்பட்ட சூழல்மாற்றங்களின் போது இவை தனிக்கலங்களாக வாழ்ந்து அச்சூழலை வெற்றி கொள்ள முடியவில்லை. அதாவது சாதிகள் சூழலுக்கேற்ப தம்மை இசைவாக்கம் செய்து கொள்வது அவைகளின் உடலியல் ரீதியில் ஏற்படும் உணர்வுகளின் விளைவாகும். எனவே ஏற்பட்ட சூழல் மாற்றத்தை இவை வெற்றி கொள்ள வேண்டுமாயின்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைப்பிலும், உடற்றொழிலியலிலும் முன்னேற்றம் காண வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன.

இங்கேதான் முக்கியமான செய்முறை தொடங்குகிறது. கலங்கள் கூட்டாக ஒன்று சேர்ந்து ஓர் கூட்டமைப்பாக வாழத்தொடங்கின. இச் செய்முறை மெதுவாக நடந்தேறியது. புதிதாக தோன்றிய செய்கையானது தாய்கலத்தை விட்டு பிரிந்து வெளியே சேர்ந்தே இருந்து கொண்டது. இவ்வாறு பல கல நிலை அமைந்ததுடன் முன்பு ஒரு கலம் செய்த வேலைகள் இப்போது தொழிற் பங்கீட்டுடன் கலக்கூட்டம் செய்யத் தொடங்கிய எனவே புதிய திசை ஒன்றை பெற்றுக் கொள்ள முடிந்தது.

தொழிற்பங்கீட்டின்போது புறச்சூழல் அறிவதற்கு [உணர்வு], இடப்பெயர்ச்சி செய்வதற்கு, உணவை உள்ளெடுப்பதற் கழிவகற்றுதல், வாயுப்பரிமாற்றம் போன்ற செயல்களை செய்வதற்கென்று பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. இவை சிறப்பான முன்னேற்றமாக அமைந்தது. இம் முன்னேற்றமானது கலக்கூட்டங்களிடையே திரிபுமாற்றத்தை ஏற்படுத்தியது. அதாவது உணவை உள்ளெடுக்கும் கலக்கூட்டம் உணவைத்தான் உள்ளெடுக்கவேண்டும், வாயுப் பரிமாற்றத்தை செய்யும் கலக்கூட்டம் அதை தொடர்ந்ததான் என்ற நிலையான மாற்றத்தை பெற்றுக்கொண்டன. அதாவது கல நிலையில் இருந்து இழையம் தோன்றும் அளவிற்கு கூர்ப்படைந்தன

[ஒரே வகையான பல கலங்கள் சேர்ந்து ஒரு தொழில் செய்யுமாயின் அது இழையம் எனப்படும்]

தொழிற்பங்கீட்டுடன் காணப்பட்ட இச்சிறிய அமைப்பை கொண்ட அங்கி காலப்போக்கில் வளர்ச்சியை அதிகரித்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தக் கொண்டது. இவ்வளர்ச்சி அதிகரிப்பானது. மேலும் உடற்றொகுதியில் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டிய நிலைமைக்கு அதனைத் தள்ளியது. எனவே வளர்ச்சியடைந்த உடலிற்கு ஏராளம் உணவினைப் பெறுவதற்கு வன்கூடு தேவைப்பட்டது [உம் மீனின் முள்] உள்ளெடுக்கப்பட்ட உணவை மற்றப்பகுதிகளுக்குக் கடத்துவதற்கும், வாயுப்பரிமாற்றம் போன்ற செய்முறைகள் சிறப்பாக நடந்தேறுவதற்கும் கடத்தும் தொகுதி தேவைப்பட்டது. அங்கி தான் வாழும் புறச்சூழல் மிகவும் சிறப்பான முறையில் அறிந்துகொள்வதற்கும், எதிரியின் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கும் சிறப்பான உணரும் அமைப்புக்கள் தேவைப்பட்டது. உணவுகளைக் காவிச்செல்ல நரம்புத் தொகுதியும், இனப்பெருக்கத்திற்காக இனப்பெருக்கத் தொகுதியும் கொண்டுவரப்பட்டன.

இவ்வாறு அங்கியின் தேவைகளுக்கேற்ப மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. இன்னும் பல உடல்தொகுதியில் மாற்றங்கள் நடந்தேறின. இறுதியாக அவை வாழ்ந்த சூழல்களுக்கேற்ப அமைப்பு வடிவங்களையும் பெற்றுக் கொண்டன.

உயிரினங்கள் 50 கோடி ஆண்டுகளின் முன்பே தோன்றிவிட்டன. நீர்நிலைகள் உயிரினங்களின் ஆரம்பகால வாழ்க்கைக்கு ஏற்ற இடமாக காணப்பட்டது. மீனினங்கள் 40 கோடி ஆண்டுகளின் முன்பும், ஆத்திசாப்பொட்டுக்கள் [பூக்காத்தண்டற்ற உள்ளனம்] 25 கோடி ஆண்டுகளின் முன்பும், பாலூட்டி விலங்குகள் 20 கோடி ஆண்டுகளின் முன்பும், இறுதியாக மனிதன் 40 இலட்சம் ஆண்டுகளின் முன்பும் தோன்றினான்.

-இயங்கியன்

www.tamilarangam.net



இலங்கையிலிருந்து
இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தைத்
திரும்பப் பெறு!

அன்பார்ந்த உழைக்கும் மக்களே!

பாசிச ராஜீவ் கும்பலே!

இந்திய இலங்கை துரோக ஒப்பந்தத்தை ரத்து செய்!

உழைக்கும் மக்க

தமிழக அரசே

இலங்கையின் தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமை இலங்கை மக்களுக்கு மட்டுமே உண்டு நமது நாட்டை நாம் நேசிப்பது போல இலங்கை மக்களின் தேசப்பற்றையும் நாம் மதிக்க வேண்டும். பாசிச ராஜீவ் கும்பலும் அதன் எடுபிடிகளும் கிளப்பிவிடுகின்ற தேசிய வெறிக்குப் பலியாகாமல் இலங்கையிலிருந்து இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தைத் திரும்பப் பெற போராடுவோம்! இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடும் இலங்கை மக்களுக்குத் தோள் கொடுப்போம்!



IPKF என்பதை Indian People Killing Forces என எமது மக்கள் அழுத்தமாகவே முத்திரை குத்தியுள்ளார்கள்.

ஆனால்,

- இந்திய இராணுவம் சமாதானப் படை
- இலங்கைத் தமிழ் மக்களின் பாதுகாவலன்
- புலிகள்தான் வலுச் சண்டைக்கு இழுக்கிறார்கள்
- 1000 க்கு மேற்பட்ட இந்திய இராணுவம் தமிழ் மக்களுக்காக உயிர்த் தியாகம் செய்திருக்கிறார்கள்

தமிழக மக்களில் பெரும்பாலானோருக்கு இந்த அபிப்பிராயம் எப்படி வந்தது.

- இந்திய அரசின் ஊதுகுழல்கள் (வானொலி, வானொளி)
- அரசியல் கட்சிகள், திராவிடர் கட்சிகள் (திமுக, அதிமுக)
- சோ, ஜெயகாந்தன் போன்ற எடுபிடிகள்
- பத்திரிகைகள் பெரும்பாலானவை

www.tamilarangam.net

இவ்வாறாக ஒரு பிரச்சார மண்டலமே தமிழகத்தை சூழவிட்ட நிலையில் ஒரு சில பத்திரிகையாளரைத் தவிர இந்திய புரட்சியாளர்களோ இதன் உண்மை நிலையை துணிச்சலாக வெளிக் கொணர்கிறார்கள். 1983 இனக்கலவர காலத்தைப் போலன்றி, இன்றைய தமிழக மக்களின் அபிப்பிராயம் உண்மை நிலையை பிரச்சாரம் செய்ய சாதகமானதாக இல்லை. இந்த கடினமான சூழலிலும் இதுவரை கால பிரச்சார இயக்கத்தை தமிழகம் பூராகவும் புதிய ஜனநாயகம் குழுவினர் நடத்தி முடித்தது சாதாரண விடயமல்ல - மதிக்கப்பட வேண்டியது!

எமது விடுதலை இயக்கங்கள் கருணாநிதி, எம்.ஜி.ஆர் போன்றவர்களை நம்பியதும் அவர்களுடன் நிலை மறந்த உறவு கொண்டதையும் இன்றைய நிலைமைக்கு முன்னால் பொருத்திப் பாருங்கள்!

1983 கலவரத்தில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதுக்கு, “தமிழகமே திரண்டு எழு!”, “தமிழ் மக்களுக்காக எனது உயிரையே கொடுக்கவும் தயங்கமாட்டேன்!!” என உடன்பிறப்புகளை புல்லரிக்க வைத்த கருணாநிதி, தொண்டை அடைக்க அழுது வானொலியில் உரைநிகழ்த்தி ரத்தத்தின் ரத்தங்களை கட்டியணைத்த எம்.ஜி.ஆர் சகாப்தங்கள் அன்று!

பல்லாயிரம் மக்களைக் கொன்று குவித்து, கற்பழிப்பு கொள்ளை என வெறிகொண்டு அலைந்த எமது மண்ணையே சுடுகாடாக்கிக் கொண்டிருக்கும் இந்திய ராணுவ அடாவடித்தனங்கள் இன்று அந்த ‘சகாப்த நாயகர்களின்’ கண்களுக்கோ அல்லது அவர்களின் வாரிசுகளுக்கோ தெரியாமல் போனாலுங்கூடப் பரவாயில்லை; தமிழ் மக்களின் பாதுகாப்பை

www.tamilarangam.net

உறுதி செய்துவிட்டுத் திரும்ப வேண்டுமாம் இந்திய ராணுவம் தமிழ் மக்களின் எலும்புக் கூடுகளுக்கும் மண்டையோடுகளுக்கும் நடுவே மக்களின் பாதுகாப்புப் பற்றி விலாசங்கள் வேறு! கறுப்புக் கண்ணாடிகளுக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் கண்களுக்கு நிஜங்கள் தெரிவதில்லையோ!

ஏன், இல்லை! எல்லாவ தேர்தலுக்கு வோட்டுப் பொறுக்குவதற்கு என்றபோது, இவர்களுக்கு ஈழப்பிரச்சினை மட்டும் விதிவிலக்கா, என்ன?. இந்திய ராணுவம் ஈழத் தமிழனை பாதுகாக்கிறது என்றோ வேட்டையாடுகிறது என்றோ முழக்கத்தை தீர்மானிப்பது தேர்தல் கூட்டைப் பொறுத்த விடயமாச்சே இவர்களுக்கு!

ஆம் நண்பர்களே!

எமது மக்கள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள் - ஆனால் இவர்களோ தேர்தலுக்காகவே எமது பிரச்சினையைப் பாவிக்கின்றார்கள். மனித நேயத்தை அடகு வைத்த இந்த வோட்டுக் கட்சிகளையும், இருளந்தி போன்றோர் தமிழ் மீது, தமிழன் மீது கொண்டுள்ள 'பற்று' வெற்று முழக்கங்கள் என்பதையும் இனங்காணுங்கள்.

எமது புரட்சியாளர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய இன்றைய பாடம்; இந்திய புரட்சிகர சக்திகளுடன் உறவு வைப்பதேயொழிய தமிழக வோட்டுக் கட்சிகளுடனல்ல என்பதையே. எமது போராட்ட வரலாறு கற்றுக்கொடுத்த படிப்பினைகளில் இதுவும் ஒன்றே!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சர்வமதப் பிரார்த்தனைகள்

## இலங்கையில் அமைதியைக் கொண்டு வருமா?

சுவிட்சர்லாந்தில் சென்ற மாதம் கன்ரோன் Schweiz ல் Einsiden என்னும் இடத்தில் பாதிரிமார்களின் தலைமையில் இலங்கையில் அமைதியைக் கொண்டு வரும் நோக்கில் பிரார்த்தனை ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

இவ் மதத் தலைவர்களது பிரார்த்தனையும் பிரார்த்தனை ஊர்வலங்களும் உண்மையில் இலங்கையில் அமைதியைக் கொண்டு வருமா?

இப்பிரார்த்தனை ஊர்வலமானது குறைந்த பட்சம் அகிம்சைப் போராட்ட வடிவத்தைக் கூடப் பெறவில்லை. அகிம்சைப் போராட்டமானது ஆரம்பத்தில் எதிரியின் ஒடுக்கு முறையை இனங்காட்டுவதற்கும் வெகுஜனங்களை அமைப்பு ரீதியாக அணி திரட்டுவதற்கும் கணிசமான அளவுக்கு உதவி செய்கிறது. ஆனால் இதை ஒரு தலையாய போராட்ட வடிவமாய் மேற்கொள்ள முடியாது. ஏனெனில் மக்களின் எதிர்ப்பு அதிகரித்ததும் மக்கள் விரோத அரசானது மக்களின் அடிப்படை உரிமைகளை மறுத்துத் தனது அடக்குமுறையைப் பிரயோகிக்கும். இவ் அடக்குமுறைக் கருவிகளாய் அரசு கட்டுமானத்தைப் பேணிக்காக்கின்ற பொலிசும் இராணுவமும் செயற்படும்.

அரசு தனது கொடூர அடக்குமுறையை கையாளும் போது நாம் தொடர்ந்து அகிம்சைப்போராட்டத்தையே மேற்கொள்வோமாயின்; அரசு எம்மை ஒடுக்குவ

www.tamilarangam.net

தந்தி வழி வகுப்பதுடன், எமது போர்க்குணாம்சங்களை கிழிப்பதற்கும் வழிவகுக்கும்.

இதனை நாம் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக் கூடாகவே பார்க்கலாம். இலங்கையில் ஆரம்ப காலங்களில் அகிம்சைப் போராட்டத்தினையும் அதன் ஒடுக்குமுறையின் பரிணாம வளர்ச்சியில் ஆயுத போராட்டத்துக்கு நாம் தள்ளப்பட்டதையும், அகிம்சைப்போராட்ட முறையின் வளர்ச்சிக்கு ஓர் உதாரணமாய்க் காணலாம்.

இப்பாதிரிமார்கள் 'இந்திய கிராமமே வெளியேறு' என்று ஒரு குறைந்த பட்சக் கோசத்தைக்கூட முன் வைக்கவில்லை. அதாவது பிரதான எதிரியை அம்பலபடுத்தாமல், கால் நடையாய் நடந்து பஜனை பாடுதல் இலங்கையில் அமைதி வந்துவிடும் என்று போதிக்கின்றனர்.

இவர்களது இப்போராட்ட முறையானது வெகுஜன போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதுடன் மக்களின் போர்க் குணாம்சத்தையும் மழுங்கடிக்கிறது.

மலையகத்தில் இதே பிரார்த்தனை இயக்கத்தை ஆரம்பித்ததன் மூலம்தான் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மலையக மக்களுக்கு வாக்குரிமை கிடைத்ததாக 'மலையகத்தின் காவலன்' தொண்டமான் தம்பட்டம் அடிக்கிறார். மலையகமக்கள் அரசியல் ரீதியில் சிந்திக்கவும் ஒடுக்குமுறைக்கெதிரான துணிகரமான போராட்டத்தை முன்னெடுப்பதற்கும் உரிய பெருந்தாக்கத்தை வடக்கு கிழக்கு நிலைமைகள் உணர்த்தக்கூடுமென்று U.N.P அரசும் தொண்டமானும் அச்சம் அடைந்தனர். மலையக மக்களின் உணர்வுகளைச் சிதைப்பதற்காக நடத்தப்பட்ட நாடகம்தான் தொண்

www.tamilarangam.net

டமானின் பிரார்த்தனை இயக்கமும் ஜே.ஆரின் வாக்குரிமை கொடுப்பனவும் ஆகும். இதை மலையக மக்கள் அரசியல் ரீதியில் சிந்திக்கவிடாமல் தடுப்பதற்காகவும் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்ட உணர்வுகளைச் சிதைப்பதற்காகவும் மத நிறுவனங்கள் பல மலையகத்தில் திட்டமிட்டு வேலை செய்கின்றன. அவர்களின் பொருளாதார ரீதியான வறுமையைத் தமது செயல்களுக்குச் சாதகமாக்குகின்றன. சாதாரணமாக ஆயிரம்பேர் கொண்ட ஒரு கிராமத்தில் குறைந்தது ஐம்பது இளைஞர்களாவது சமுதாய ஒடுக்குமுறைகளுக்கெதிரான சிந்தனைப்போக்கை போராட்ட உணர்வை கொண்டிருப்பதும் இயல்பு.

இவ் இளைஞர்களை மத நிறுவனங்கள் அணுகுகின்றன. ஒடுக்குமுறைக்கெதிரான போராட்ட உணர்வு கொண்டவர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்கின்றனர். பொருளாதார உதவிகளை வேண்டிய அளவுக்குச் செய்கின்றன. இதன் மூலம் அவர்களது உண்மையான சிந்தனைப் போக்குகளைத் திசை திருப்புகின்றன. மேற்கத்திய நாடுகள் தமது பொருளாதார இருப்புக்களை முன்வைத்து உலக நாடுகளில் மேலும் பல காலங்களுக்குத் தங்க வைக்கும் திட்டத்துடன் பெருந்தொகையான நிதி உதவிகளைக் கொடுத்து மத நிறுவனங்களைச் செயற்படுத்துகின்றன.

அமைதியை இங்கு நாட்டவே பிரார்த்தனை இயக்கங்களை நடாத்துவதாய்க்கூறும் மதத்தலைவர்கள் அமெரிக்க வல்லரசுடன் கூட்டுச்சேர்ந்து நிக்கராகுவாவிலும் பல இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் அமைதியைக் குலைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். அமைதியைப்

www.tamilarangam.net

பேண விரும்பும் இதே மத நிறுவனங்கள் ஆயுத உற்பத்தியைத் தடுப்பதற்குப் பதிலாக, வல்லரசுகள் பலவற்றுடன் கூட்டுச்சேர்ந்து ஆயுத உற்பத்தியில் ஈடுபடுகின்றனர்.

பிலிப்பைன்ஸ், லத்தீன், அமெரிக்கா போன்ற நாடுகளில் மத நிறுவனங்களில் உள்ள சில பாதிரிமார் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையின் தேவையை உணர்ந்துள்ளனர்.

இந்நாடுகளில் உள்ள விடுதலைப்போராட்டத்தை அங்கீகரித்ததுடன், அதற்கு ஆதரவாய் பிரச்சாரம் செய்துள்ளனர். ஏன் சில மதநிறுவனங்களில் வழங்கப்பட்ட பட்டங்களையும் துறந்து ஒடுக்கப்பட்ட மக்களுடன் இணைந்து ஆயுதப்போராட்டத்தை மேற்கொள்கின்றனர். இவர்கள் மதப் பிடிப்புள்ளவர்களாய் இருக்கும் அதே வேளை ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப்போராட்டத்துக்கும் மதிப்பளிக்கின்றனர்.

மேலும் இம்மதத்தலைவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தோடு ஐக்கியமாகும்போது போப்போன்றவர்களின் திருச்சபைக் கட்டுப்பாடுகளையும் உதறித்தள்ளுகின்றனர். இதுவே ஜனநாயகத்துக்கான, அமைதியை உருவாக்கவுமான மதத்தலைவர்களின் உண்மைச் செயற்பாடுகள் என்று இன்றைய லத்தீன் அமெரிக்க பாதிரிமார்கள் உறுதி கொள்கின்றனர். மாடுக சுவிசில் நடந்த பிரார்த்தனை ஊர்வலமோ, கொண்டமானின் பிரார்த்தனை இயக்கமோ இலங்கையில் அமைதியைக் கொண்டுவரமாட்டாது.

சாருதி


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றுகதை



# புதிய பிரார்த்தனை

செல்வாச்சி

பாட்டியின் வளவுக்குள் இந்திய இராணுவத்தினர் இருந்தாற் போல திடீரென சுற்றி வளைப்பு.. அப்பாட்டம் அடாவடித்தனங்கள்.... சுற்றத்துக்கும் ஒவ்வொரு வீட்டுக்கும் விளக்கொளியாய் மாறி மாறி சீறிப் பாய்ந்தனர் இந்திய இராணுவத்தினர்.

பாட்டி இருந்த இடம் விட்டு அசையவே இல்லை. அவரை நோக்கி மெட்டுக் கொருந்த படி, அக்கி இருந்தார். தாடி நீட்டிப்பாக்க தாடையை மறைத்திருக்கும் நீண்ட அடர்ந்த மீசையும் கொண்ட நெட்டையானவன் இவன்தான் இராணுவ குழுவின் தலைவனாக இருக்க வேண்டும். காட்டுத்தனமாக ஏதோ அலறினான். அவனுக்கருகில் நின்று அந்த நீண்ட துப்பாக்கி வைத்திருந்த ஒல்லியானவன்

« நீயாரு இன்ரா பேரை அவன் எங்கிட்ட இருக்கான் வெய் தெழுவ் சொல்லு சொல்லு» என்று தமிழில் அதட்டினான்.

பாட்டி வாயே திறக்கவில்லை. இராணுவ அட்டூழியங்கள் பாட்டிக்கு ஒன்றும் புதிய அனுபவம் அல்ல. 84, 85ம் ஆண்டுகளில் சிங்கள இராணுவம் பாட்டியின் மகன் நியமனை தேடி அந்த வீட்டை சுற்றுமுகை போட்டனர். அவர்களின் தேடல் வேட்டையிலும் அப்படி நிற்கனி அகப்படாமல் தப்பாது. எல்லாம் சிதறடிக்கப்படும். இறுதியில் முற்றத்தில் நிற்கும் வாழை மரம் பூஞ்செடிகள் எல்லாம் வெட்டி சிதறடிக்கப்படும்.

பாட்டி அப்பவும் ஒன்றும்

பேசவில்லை. இங்கே இராணுவத்திடம் இவ்வாறு அனுபவங்களைப் பெற்ற செல்லாச்சிப் பாட்டிக்கு இந்த இந்திய இராணுவத்தின் கொடூரங்கள் அதிர்ச்சியையோ பயத்தையோ கொடுக்கவில்லை. மனம் மகாத்மா காந்தியின் வாரிசுகள் இவர்கள் என்ற நம்பிக்கையை பொய்ப்பித்தது. அவ்வளவுதான்!

சற்று நேரத்துக்கு முதல் இந்திய இராணுவத்தினர் சென்ற கூட்டத்தையும் கூர்ந்தார்கள்..... பாட்டியின் உடுப்பு பெட்டி முறிந்து தரையில் சிதறி கிடந்தது. அதே இராணுவ தலைவன் தமிழ் கதைக்கும் ஒரு சிப்பாயை அழைத்து கூப்பிட்டு கட்டளை போடும் தொனியில் ஏதோ சொன்னான். அவனும் தலையை ஆட்டி முறை பலமாக அதட்டியபடி பாட்டியிடம் வந்தான்.

« எய் கிழவி ஒன்ற பேரன் எங்கிட்ட வந்தது நமக்கு தெரியும்! அவன் எங்கிட்டே இருக்கான் என்று உனக்கு தெரியும்!
ஒன்ன இங்கிட்ட கேட்டா நீ ஒன்னுமே சொல்லமாட்டாய் அதான் ஒன்ன காம்புக்கு கொண்டு போறம் »

« தூக்கணும் போறியள்..... இந்த கிழவியை கொண்டு என்னப்பா செய்யப் போறியள் அதையும் தான் பாப்பம்...» கைகளை இடுப்பில் வைத்தபடி மௌனமாக நின்றிருந்தாள் பாட்டி.

பாட்டி ஜீப்பினுள் திணிக்கப்பட்டாள். ஏதோ சாதனை புரிந்தவர்கள் இந்த நாரியை வதை செய்த மாதிரி பாட்டியின் இருமல் துப்பாக்கிகள் தெறித்தன.

செல்லாச்சி பாட்டி இல்லாமல் இந்த ஊருக்குள் நல்லதோ கெட்டதோ எந்த காரியமும் நடக்காது.

சந்தையில் இருந்தாலும் சரி சாவீட்டில் ஆயினும் சரி, செல்லாச்சி பாட்டி அங்கால் தனியாவா. பாட்டியும் அப்படித்தான்; ஊரவர்களின் எந்த வீட்டுப் பிரச்சினையாயினும் சரி; தன் வீட்டு பிரச்சினை போன்றே கவனத்தில் எடுத்திடுவாள்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக எங்கு அநியாயம் நடந்தாலுமோ சத்தியாக்கிரகமோ முன்னெல்லாம் பாட்டி அங்கு நிற்பாள். சத்தியாக்கிரகம் என்றும் சொல்லும் அன்னை பூபதி முன்னணி நடத்திய போராட்டங்கள் ஒன்றுமே பாட்டி தப்ப விடவில்லை. ஊரில் இருக்கும் தன்னோட்ட பொங்கி எழுந்து

www.tamilarangam.net

உறுதியையோ இரண்டையுமோ இழந்துக் கொண்டு போராட்டங்களில் பங்கெடுக்க போய் விடுவான் செல்லாச்சி பாட்டி.

பாட்டி துணிந்தவள் தான்!

87ம் ஆண்டு ஐப்பசி இறுதியில் இந்திய இராணுவம் நடத்திய ஜெய ஹோன் டவுண் வேட்டையின் போது.... பாட்டி நாச்சிமார் அம்மன் கோயிலில் அகதியாய் இருந்தார்.

வடக்கால பொன்னுத்துரையின் ஒருமகள் அசந்தாவுக்கு அந்நேரம் வருமாதம். பிரசவ வேதனையில் ஒரு கத்தல்... அழுகை... குமுறல்

«யாடி பிள்ளை வெளியே வெளியே... வெளியில ஒரு சண்டை நடக்குது: பெடியளுக்கும் இந்தியன் ஆமிக்கும்! இதுக்குள்ளா என்னெண்டு பெத்தெடுக்கப் போறது» தகப்பன் பொன்னுத்துரை துவாயால அசந்தாவின் முகத்துக்கு விசிறியபடி

அதுவும் தலைப்பிரசவம் ஒரு வைத்தியரோ தாதியோ எவருமே இந்த கோயில் அகதிகளில் இல்லை. செல்லாச்சி பாட்டியும் தனக்கு தெரிந்த வைத்தியம் எல்லாம் செய்து பார்த்தாகிவிட்டது. அவளோ முன்னையதை விட மோசமாக கத்தினாள்.

«இந்தசாமம் பொன்னுத்துரையர் இனி இவள இங்க வைச்சிருக்கக் கூடாது. பிடியுங்கோ ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவம். அதோ கடவுள் விட்ட வழி!» அசந்தாவின் முகத்து வியர்வையை துடைத்தபடி செல்லாச்சி பாட்டி.

«உனக்கென்ன விசரோ.... வெளிய போகேலாது; ஒரு பீரங்கி துவக்கு சத்தமாயிருக்கு.» பொன்னுத்துரையர் துவாயை உதறிக் கொண்டார்.

«சாகிறது எப்பவும் சாகிறது தான் அதுக்காக கண்முன்னால ஒரு உயிரை துடிதுடிக்க சாக விடுறதே! பிடியுங்கோ சயிக்கிளில வெள்ளைக் கொடியை கட்டிக் கொண்டு போவம் ஆஸ்பத்திரிக்கு. நடக்கிறது நடக்கட்டும்» துள்ளி எழுந்தார் பள்ளி ஆசிரியர் பஞ்சாட்சரம்.

செல்லாச்சிபாட்டி தலைமையில் பஞ்சாட்சர வாத்தியார் பொன்னுத்துரையர் மூன்று பேருமாய் அசந்தாவை வெள்ளைக் கொடி கட்டிய சயிக்கிளில ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனார்கள்.

உண்மையிலேயே செல்லாச்சிபாட்டி உறுதியானவர். 65 வயதாகியும் இன்னும் தனிக்கட்டையாக இருந்தார்-

சனங்களோடு 30 வயதிலிருந்து விதவைக் கோலம். இந்த ஒரு மகனை அன்பு கொட்டி வளர்த்தாள். தோட்டம் துரவு எல்லாம் அமைத்தாள். மகனுக்கு பொருத்தமான மாப்பிள்ளையையும் தேடி வைத்தாள்.

இருந்தாற் போல வந்த மாரடைப்பு மகனுக்கு இயமனானது. 3 வயதுக் குழந்தை அவனை. தியாகு! தனது முழு உழைப்பையும் கொட்டி பேரனை ஆளாக்கினாள். உயர்தர வகுப்பு வரை தியாகுவும் படித்தான். நாட்டில் நெருப்பு விட்டெரிந்த சிங்கள அரசின் இனவெறி அடக்குமுறைகள், தமிழ் இளைஞர் மத்தியில் எழுப்பிய பொறி போராட்ட அக்கினிக் குஞ்சுகள்... இளைஞனை தியாகுவையும் தாக்கத் தொடங்கின.

தியாகு நிறைய அறிவியல் புத்தகங்களை இரவல் வீட்டுக்குக் கொண்டு வந்து படித்தான். பாட்டி பேரன் மீது கொண்ட பாசம் இனியவை «நெஞ்சுக்கு [illegible] டாலேனை... பட பட லேலை...» என்று அவரது சொன்னால் இன்னும் தியாகு பாட்டி மீதே பாசம் பொழிவான்.

«எத்தனை இளைஞர்கள் தங்களை இழந்து இன்று போராடிக் கொண்டு இருக்கிறார்கள். எத்தனை உயிர்கள் அந்த கொடூர இனவெறியர்களால் சிதைக்கப்பட்டது. இந்த தியாகங்கள் இந்த இழப்புகள்... எல்லாம் எதற்காக வெறும் தனி மனிதர்களுக்காக அல்ல... சுதந்திரத்துக்காக... 'சுபிட்சமான வாழ்வுக்காக...!' என்கின்ற இலட்சியத்தின் அந்த இலக்கை உலகம் ஏற்காது போனது கொண்டிருக்கிறது. பேர் இன்று நாமும் பேசாமல் சென்றிடாமல்... தமிழ் சனங்களால், இனவாதத்துக்கு தீர்வு எங்கே இருக்கிறது?

ஆம்... தியாகு யதார்த்தமாக முடிவு செய்தான். சில நாளில் அந்த கிராமத்திலே தியாகு எல்லோராலும் பேசப்படும் போராளியாகிவிட்டான். சில இளைஞர்கள் அவனை தோழா என்றனர் வயது குறைந்தவர்கள் தம்பி என்றனர் மாமா போட்டு.

அவனுக்கு இந்த கிராமத்தில் கிடைத்த மரியாதைக்கு மேலாக ஆயுதமேந்தி [illegible]-பட்டு நிழலும் எடுத்து. அவன் தான் ஒரு வீர இயக்கத்தோடு இணைத்துக் கொண்டான்

«அராஜகம் ஒழிக்கப்பட வேண்டும்... இவ் விடுதலைப் போராட்டத்தையே அறிந்து நாசப்

www.tamilarangam.net

பகுதி விறகும். >>பிள்ளையார் கோயில
ரயில் போத்த கூடத்தில் துவண்டு
பேசினான் தியாகு.

இயக்கப் பிரசாரப் பணியில்
ஈடுபட்டிருந்த ... ஒரு செய்த போது, ஒருநாள்
கைக்குண்டாய் கோட்டத்தில் வைத்து
சிங்கள இராணுவத்தினால் நிறைய
பிரசுரங்களுடன் தியாகு கைது செய்
யப்பட்டான்.

தியாகு சிறைக்குச் சென்று ஒரு
வருடத்துக்கு மேல் இருக்கிறான். நிறைய
மாற்றங்கள்... விடுதலைப் போராட்டத்தை
அராஜகம் கவ்வும் நேரம் ஈழத்துக்கு
தனது பார்வையும் ... 
இயக்கத்துக்குள் ஏதும் நிறைய மாற்றங்கள்.
இயக்கங்களுக்கிடையில் மோதல்கள்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை
இயக்கமே ஏற்கின்றது
என்று அறிந்து

«ஓ... எங்கள் போராட்டம் விலை
பேசப்பட்டது. எங்கள்... ஆயிரமாயிரம்
மாவீரர்களின் கனவுகள். அழிபட்டு
விட்டார்கள்... இந்த ஒப்பந்தம்... இரு
நாடுகளினதும் நலன் கருதியே ஆகிய
ஈழ மக்களின் உரிமைக்கான அபி
லாஷைகள் பூர்த்தி செய்யாது...
பழுத்து பழுத்து கொட்டாவாரி விட்டார்
கள்» தியாகு கவலைப்பட்டான்.

«அமைதிப் படை என்ற பெயரில்
ஒரு ஆக்கிரமிப்பு இந்தியாவின்
ஆக்கிரமிப்பு நடவடிக்கை இது...
இன்று எமது போராட்டம் முதலில்
இந்தியாவுக்கு எதிராகத்தான் நடத்
தப்பட வேண்டும். அதுவும், ஒன்றுபட்ட
சிங்கள, தமிழ், முஸ்லிம் ஜனநாயக
சக்திகளால் முன்னெடுக்கப்பட வேண்டும்»
என்று

நிறைய விஷயங்களை சிறையில் இருந்த
ஏனைய அரசியல் கைதிகளுடன் ஆய்வு
செய்தான்.

அரசியல் கைதிகள் இந்திய-
இலங்கை ஒப்பந்தத்தின் பெயரில்
விடுவிக்கப்பட்டனர். தியாகு நிம்மதி
அடைந்தான். இயக்கம் அவனைத் தேடித்
திரிந்து தேடியது.

செல்லாச்சிப் பாட்டி தோட்டத்துக்கு
கொண்டு வரப்பட்டு ஒரு சிறிய அறையினுள்
தள்ளி விடப்பட்டான்.

இன்றைய பகல் முழுவதும்
பாட்டியின் காவல் ஒன்றுமே
படவில்லை. பக்கத்து ஊர்... பட்டிக்கு
மயக்கம் போட்டது. «ஐயோ அம்மா...
ஐயோ அம்மா... ஐயோ... ஐயோ»



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ற அவரது குரல் பாட்டியை திகைக்க வைத்தது. அந்தக் குரல் ஒரு சிறுவனுடையது என்பதை புரிந்து கொள்ள பாட்டிக்கு அவ்வளவு நேரம் எடுக்கவில்லை.

இந்திராவைத் தொலைத்தான் இப்படி மட்டும் பாட்டி பெரிதாக ஒன்றும் கவலைப்படவில்லை. இது வரை வாழ்ந்த வாழ்க்கையே பாட்டிக்கு ஒரு திறந்த சிறைச்சாலைதான்!

பாட்டி இந்த இந்திராவைக் கொண்டு தொலைக்க விரும்பிய போது ஒரு உறுதியெடுத்துக் கொண்டார். மனிதனை மறந்த மனித மிருகங்கள் மத்தியில்... இப்படியானவர்கள், தான் எதுவுமே கதைப்பதில்லை... அவர்கள் எது வேண்டுமானாலும் செய்யட்டும்... ஆயினும் தனது மௌனம் பல உண்மைகளை வெளிக்கொணரும் எதிர் காலத்தில் போதித்தே தீரும்! பாட்டிக்கு இப்போ இருப்பதெல்லாம் தன் பேரன் தியாகத்தைப் பற்றிய கவலைதான்.

அவன் உண்மையாக எமது தேசத்தையும் மக்களையும் நேசித்தவன். சுதந்திரத்திற்காக போராட்டத்தை வாழ்க்கையாக்கிக் கொண்டான். இவனது இலட்சியம் வெற்றிபெறும் வரை, தான் இறக்கவும் பாடாயில்லை. அதற்குள் தன் பேரனுக்கு ஒன்றும் நடந்து விடக் கூடாது.

எங்கள் மக்கள் அனைவருக்குமே தன் பங்களிக்கும் கொடுமைகளுக்கும் இழப்புகளுக்கும் பொறுதி வேண்டும்.

இவ்வு வேதனைக்கும் கொடுக நம் தாய்க்குலம் இத்தகைய விடுதலையை பெற்றுக் கொடுக்க வேண்டும். ஆகவே இந்திராவை தொலைத்து இருக்கும் பாட்டியின் இன்றைய பிரார்த்தனையாக இருக்கிறது.

சாங்கிருத்யான்

வாசகர்களே !
மனிதம்,
தனது வளர்ச்சிக்கும்
உறுதிக்குமான
ஆக்கங்களையும்,
விமர்சனங்களையும்,
உங்களிடமிருந்து
வரவேற்கிறோம்! ஆ-ர் குழு.

Manitham
Zentrum 5 (Z 5)
Unterstützungsverein
Postfach 8542
3001 Bern
SWITZERLAND

www.tamilarangam.net

# இந்திய இராணுவம் வெளியேறும்?

இலங்கை இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்டு இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன. படைவிலகல் சம்பந்தமான சர்ச்சைகள் தொடர்கின்றன. தமிழ் மக்கள் அடுக்கடுக்காக பல துயரங்களுள் மூழ்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நம்பிய இயக்கங்களோ இந்திய அரசோ அவர்களின் வாழ்வை உருக்குலைத்துவிட்டார்கள். இந் நிலையில் படைவிலகல் சர்ச்சைதான் முக்கிய பிரச்சினையாக இடம்பிடித்துள்ளது.

வடக்கு-கிழக்கில் புலிகளை நிராயுதபாணியாக்க இலங்கை அரசு இந்தியாவிடம் சரணடைந்தது. நீண்ட காலமாகவே இந்தியா இலங்கைமீது தனது மேலாதிபத்தியத்தை செலுத்தும் கைங்கரியத்தில் அதன் உளவு யந்திரமான RAW இனை முடுக்கி விட்டிருந்தது. இயக்கங்களை தனது கையுக்குள் போட்டு கைக்கூலிகளாக வளர்த்தெடுக்கும் அரசியல் வஞ்சனைக்கு இயக்கங்களைப் பலியாக்கும் பணியை RAW செய்துமுடித்தது. இலங்கையின் அனுமதியின்றியே அதன் பிராந்தியத்துள் ஊடுருவி உணவுப் பொட்டலங்களை தாவியதன் மூலம் இலங்கையை மறைமுகமாக மிரட்டியது இந்தியா. இந்த நெருக்கடியில் எழுந்த ஒப்பந்தம் தெளிவான வரைமுறைகள் அற்றதாகவும் வெறும் அடிமை சாஸனமாகவும் அமைந்தது. இன்று இலங்கை இந்தியா இரு தரப்பினரும் எழுப்பும் நாக்கர்த்தியான விவாதங்கள் வரைமுறைகள் அற்ற ஒப்பந்தம் என்பதை தெளிவாக்குகிறது.

www.tamilarangam.net

« யூலை 29 க்குள் இந்தியப் படை முழுவதும்
வெளியேறி விடவேண்டும் »

என முதலில் இலங்கை அரசு கண்டிப்பான தொனியில் கூறி

« படையை விலக்கிக்கொள்ள நாள் அவகாசம்
காணாது »

என்று குறுகிய காலம் உயிர்வாழக்கூடிய பொய்யை இந்தி
கூறியது.

« வரும்போது மட்டும் ஒரு நாள் போதும் என்று-
னபோது போவதற்கு கால அவகாசம் ஏன் காணாது »

என இந்திய அரசின் வாயை அடைத்தது இலங்கை அரசு!
இந்தியா நிறத்தை மாற்றிக்கொண்டு,

« தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
மாகாண சபை அதிகார பகிர்வு வழங்கப்பட வேண்டும். »

என்ற நிபந்தனையை தூக்கிப் போட்டது.

« இவை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாத அம்சங்கள் »
என்றது இலங்கை அரசு.

இவ்வாறு நடந்த தர்க்கங்களிற்கு
சிகரம் வைத்தாற்போல் அமைந்தது பிரேமதாசாவின் பதில்:

« இலங்கை அரசின் அங்கீகாரம் இன்றியும் அதன்
விருப்புக்களுக்கு எதிராகவும் இலங்கைப் பிரதே
சத்தில் இந்தியப்படை தங்கியிருப்பதற்கான ஒரு
கட்டுப்பாட்டை ஒப்பந்தம் உருவாக்குகிறது என்
பது இந்தியாவின் கருத்தாக இருந்தால் இல
ங்கையின் இறைமைக்கும் தேசிய நலன்களுக்
கும் ஒப்பந்தம் தீங்கானது. »

என இலங்கை அரசு அறிவித்துவிட்டது.

திருப்பி பதிலளிக்க

இந்தியா முயலுமாகில் அதன் மேலாதிபத்திய நோக்கம் அம்பலமாகிவிடும் என்பதால் இந்திய அரசு வேறு வழிக ளில் கவனம் செலுத்தியது. தொண்டமானே தமது வர்க் காலத்துப் பிரதிநிதியாக இந்தியா பாவித்தது. மலை யக மக்களின் பிரஜாவுரிமைக்காக தான் போராடிய தாக ஜம்பம் அடிக்கும் தொண்டமான் தான் இலங் கைப் பிரஜை என்பதை மறந்து இந்தியத் தேசிய உண ர்வுடன் செயற்பட்டார்.

புலிகளுக்கு எதிராக தனது விசுவா -ச இயக்கங்களை ஏவிவிட்டு தோல்விகண்ட இந்தியா இ- ன்று பலவந்தமான முறையில் இளைஞர்களைக் கடத்திச் சென்று தொண்டர் படையை உருவாக்க உதவுகிறது. அதுமட்டுமின்றி,

« இந்தியப்படை வெளியேறுமாகில் தமிழீழம் பிரிவது தவிர்க்க முடியாது » என்றும்

« காடும் மலையும் எமக்கு புதிதல்ல » என்றும்

வசனம் பேசி நாடகம் ரசித்துக் கொண்டனர்.

இவ்வாறு இவர்களை இந்தியா தூண்டிவிட்டது.

படைவிலகல் பற்றி பேசி முடிவுக்கு வருவதே முறையானது என 'ஜனநாயக' முகத்துடன் இந்தியா இலங்கை அரசுக்கு அழைப்பு விடுத்தது.

« இலங்கையிலுள்ள சகல படைகளுக்கும் ஜனாதிபதியே பிரதம தளபதி »

மற்றும் « புலிகளுடன் போர்நிறுத்தம் »

என்ற நிபந்தனைகளை இந்தியா நிறைவேற்றினால் இரு தரப் பும் பேச முடியும் என்றது இலங்கை அரசு.

இந்திய அரசு

www.tamilarangam.net

இதை ஒரேயடியாகவே மறந்துவிட்டு திரைமறைவில் இராணுவ ரீதியில் மிரட்டியது. தனது கடற்படையை கொழும்பு நோக்கி நிறுத்தி வைத்ததுடன் தமிழ்நாட்டிலும் இராணுவத்தை தயார் நிலையில் வைத்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை,

ஸ்ரீ.ல.சு.க இன் அடக்கமான வாசிப்பு

காமினி, லலித் போன்றவர்களின் சமரச பேச்சுக்கள்

தொண்டமானின் இந்திய உணர்வு வெளிப்பாடுகள்

என்பன இலங்கை அரசை 'தனிக்க' வைத்தது. இன்னொரு புறம் JVP யின் நெருக்கடி அரசை அச்சுறுத்தும் வகையில் வளர்ந்துகொண்டிருக்கிறது. இவ்வாறாக, நிர்ப்பந்த முனையில் நிறுத்தப்பட்டுள்ள UNP அரசு எதிரே இந்தியாவின் மிரட்டலையும் சந்தித்துக் கொண்டிருக்கிறது. இதன் விளைவு இலங்கை அரசு JVP யுடன் அல்லது இந்திய அரசுடன் சமரசம் கொள்ள வைக்கும். இதன் தோற்றப்பாடுகள் ஏற்கனவே தெரிய ஆரம்பித்துவிட்டன. தனது இரு நிபந்தனைகளையும் விட்டுவிட்டு இலங்கை அரசு இந்திய அரசுடன் பேச சம்மதித்தது. அதேநேரம் JVP க்கும் பகிரங்க அழைப்பு விடுத்தது. JVP யின் நோக்கம் அரசை கைப்பற்றுவது என்பதால் அதன் பேரமும் அதன் அடிப்படையிலேயே அமையும் - எனவே பேச்சுவார்த்தைக்கான சாத்தியமும் மிக குறைவாகவே உள்ளது. JVP யுடன் சமரசம் செய்து தனது ஆட்சியை ஒப்படைக்கவோ பங்கு போடவோ இலங்கை அரசு தயாராகவே இல்லை. எனவே இந்தியாவுடன் சமரசத்துக்கு வரவே அதிகளவு சாத்தியம் உண்டு.

சிங்கள மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்பு உணர்வில் பற்றவைத்து அரசை அச்சு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ழுந்தி நிற்கும் JVP யின் கையில் ஆட்சியைப் பறிகொடுக்க தயாராக இல்லாத நிலையிலேயே UNP அரசு JVP யை முந்தியடித்து இந்தியாவைப் பார்த்துக் குரைத்தது. உதாரணமாக JVP இந்தியப் பொருட்களுக்கு தடைவிதித்த போது அரசு முந்திக்கொண்டு பம்பாய் வெங்காயத்துக்கும் (லங்கா வெங்காயம் எனவும்), மைசூர் பருப்புக்கும் (செம் பருப்பு எனவும்) பெயர்மாற்றம் சிறுபிள்ளைத்தனமான வேலையைக்கூட செய்தது. அதேபோல் JVP இந்திய திரைப்படங்களுக்கு தடைவிதித்த போது கண்டும் காணாமல் இருந்தது.

பிரேமதாசா இந்திய எதிர்ப்பு உணர்வு உடையவர் என்ற கருத்தொன்றும் உள்ளது. இது ஓரளவு உண்மையே எனினும் (இவரிடம் காணப்படும்) இந்தக் கூறு மட்டும் இந்தியப் படை வெளியேற்றத்தைத் தீர்மானிக்க முடியாது.

பிரச்சினைகள் முற்றி வெடிக்கும் போது இராணுவ ரீதியில் அடக்க முயல்வதும் அதில் தோல்வி காணும் பட்சத்தில் ஏமாற்றாகவும் சம்பிரதாயமாகவும் 'பேச்சுக்களை' ஆரம்பிப்பதும் பிரச்சினைகளை இழுத்தடித்து குமுறி எழாமல் பிசுபிசுக்கச் செய்வதும் ஜனநாயக விரோத அரசுகளின் உத்திகளாகும். இந்திய அரசுக்கும் கூட அறிவிக்காமல் நேரடியாகவே புலிகளுடன் மட்டும் பேச்சுக்களை இலங்கை அரசு தொடங்கிய அந்த 'வேகம்' இதுவரை நடைபெற்ற பேச்சுக்களிலிருந்து வேறுபட்ட அம்சமாகும். ஆனால் இன்று அரசின் நிலை என்ன? - இந்திய அரசின் விருப்பப்படி மற்ற இயக்கங்களுடனும் பேசப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். இதேவேளை படைவிலகல் சம்பந்தமாக இந்தியாவுடனும் பேச்சுவார்த்தை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் சமரசம் காணப்படும் பட்சத்தில் இலங்கை அரசு எடுக்கும் அடுத்த நிலைப்பாடு இலங்கை வரலாற்றில் தமிழ் மக்கள் ஏமாறிய அடுத்த நிகழ்வாக அரசு-புலி பேச்சுவார்த்தை முடிவுறலாம்.

இலங்கை இந்திய அரசுகள் 'படைவிலகல் சம்பந்தமான கால அட்டவணையை தயாரித்தல்' என்ற ஒரு அறிவிப்பின்கீழ் பேச்சுக்களை நடத்திக்கொண்டிருக்கின்றன. இந்திய அரசு வாரம் 1500 இராணுவம் வீதம் 30 கிழமையில் (அ-து 1990 பெப்ரவரி வரை) வாபஸ் ஆகலாம் என்ற ஆலோசனையை ஏற்கனவே தெரிவித்துள்ளது. இலங்கை அரசு இப்போ அக்டோபர் மாதத்துள் முற்றாக படை விலக்கிக்கொள்ளப்பட வேண்டும் என குரல் தாழ்த்திக் கொண்டுள்ளது.

யூலை 29 ந் திகதி 600 இராணுவத்தைக் கிள்ளி அனுப்பிவிட்டு 'படைவிலகல்' என படம் பிடித்தார்கள். அதன்பின் 900 பேர் 700 பேர் என ஒரு சில நூற்றுக் கணக்கான இராணுவம் கப்பலேறிச் சென்றது. சாதாரணமாகவே இராணுவ நடவடிக்கைகளில் அங்கவீனமானவர்களை அனுப்பிவைப்பதையும், சுழற்சி முறையில் இலங்கையிலிருந்து இந்தியா அனுப்பப்படும்போதும் இம் முறை 'படைவிலகல்' என்ற தலைப்பின்கீழ் படப்பிடிப்பு நடத்தினார்கள்.

தெற்காசிய மேலாதிபத்திய வெறிபிடித்த இந்தியா மேலும் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிட்டு தனது இருப்பை இறுக்கிக்கொள்ளவே முயற்சிக்கும். அதற்காக படை விலகல் நாடகங்களும் பேச்சுவார்த்தைகளும் திரைமறைவில் இராணுவ மிரட்டல்களும் தொடரலாம்.

—தார்க்கேன்

www.tamilarangam.net

# ஐரோப்பிய தெருக்களில்....

இன்று காலையும்
நேர்த்தியாய் காலநிலை
அலங்காரம் கலையாமல்
ஆண்களும் பெண்களும்.....

பரமண்ணரும் மனைவியும்
பெற்றோர்க்கு பதிலாய் ஓடி ஆடி
பதினாறு வயதொன்று
பக்கத் தோழனாய் தொடர்ந்த
தெருக்களிலும் கார்களிலும்
ஆண்களும் பெண்களும்....

ஐயரும் வந்து
அருந்ததி காட்ட
முதல் வரிசையில் நின்று
கைகுலுக்கி காசு கொடுத்து
பவுண் போட்டு
பாசல் கொடுத்து
படத்திற்கு முகம் காட்டி...

ஓ.... என்ன சனம்!
என் நண்பன் சொன்னான்
ஊரில் நடந்தது போல்
இருந்ததென்று.

பாவம், அவன் அங்கே
வாகனத்து வெடிகுண்டில்...
செல்லடியில்....
இருபது பேர் மாண்டதில்
இவனது சகோதரனும்
ஒருவனாக இருந்திருந்தான்!

www.tamilarangam.net

ஆனால் இங்கே! சினிமா
சூதாடிகளுக்காக,
திருமண விழாவிற்காக;
பிறந்த நாளுக்காக
அன்னிய நாட்டுத்
தெருக்களில் அலங்காரமாக...

அகதிகளாய் வந்து
ஐரோப்பிய நாடுகளில்
நிலையான இடம் தேடி
தெருக்களில் அலையும்
ஆண்களும் பெண்களும்...

— கலாநேசன்

---

பக். 57இன் தொடர்....

* * * * *

வாழமுடியாது. ஏனெனில் அச்சமூகம் தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசியல் உரிமை முக்கியமானதாகும். சுவிற்சர்லாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளில் நீண்டகாலமாக வாழும் வெளிநாட்டவர்களிற்கு இன்னும் வாக்குரிமை கூட கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பிய தமிழ் அகதிகளாகிய நாம் இந்நாட்டில் பிரச்சனையாயின் இன்னொர் நாட்டிற்கு செல்லலாம் என்றால்;

அந்தந்த நாடுகளில் வெவ்வேறுவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவே நேரும். அவைகளைப்பார்க்கும் போது வெளிநாடுகளில் நிரந்தரமாக வாழமுடியாது என்பதை மேற்கூறிய நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

— உலகளாவி.

பக்கம். 15இன் தொடர்....

* * * * *

ஆனால் ஒரு சில தலைவர்கள் மட்டும் தான் என்றும் மக்களால் நேசிக்கப்படுகிறவர்களாக, வரலாறு மறக்க முடியாத சரித்திர புருஷர்களாக விளங்குகிறார்கள். அவர்களின் மறைவுக்காக மக்கள் கண்ணீரைச் சொரிவதும் உண்மை! சில வேளை செங்குருதியைச் சிந்துவதும் உண்மை! ஆனால் எங்கள் இத் தலைவர்களுக்காக....?

— சாகித்தியன்

www.tamilarangam.net

மலையகம்:

# தேயிலைச் செடிகளில் தேய்ந்த முகங்கள்



இலங்கையில் பிரித்தானியரின் வருகையுடன் மலையக மக்களின் வருகையும் ஆரம்பித்துவிட்டது. பிரித்தானிய ஆட்சியினர் இலங்கைக்கு வந்த பொழுது, வடக்கே யாழ்ப்பாண அரசும் தெற்கே கோட்டை இராட்சியமும் போர்த்துக்கீசரால் தோற்கடிக்கப்பட்ட நிலையில், கண்டி ராட்சியம் சுதந்திர அரசாக விளங்கியது. பிரித்தானியர் கண்டி இராட்சியத்தைப் பற்றி, அங்குள்ள நிலங்களை கோப்பிப் பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்தினர். இக்காலகட்டத்தில் கோப்பிப் பயிர்ச் செய்கைக்கு சிங்களத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த முடியாத இக்கட்டான நிலை பிரிட்டிஷ் அரசிற்கு ஏற்பட்டது. இதன் காரணமாகவே தென்னிந்தியாவிலிருந்து மலையக மக்கள் தோட்டப்பயிர்ச் செய்கைக்காக கொண்டுவரப்பட்டனர்.

மலையக மக்களுக்கு இலங்கையில் 1½ நூற்றாண்டுக்கு மேற்பட்ட தனித்துவமான வரலாறும், அரசியல் பொருளாதார, கலாசார, சமூகப் பின்னணியும் உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மலையக மக்கள் இலங்கைக்கு வந்த காலம் தொட்டே, சிங்கள மக்கள் மத்தியில் இவர்களுக்-கெதிரான எதிர்ப்புணர்வும் அச்சமும் ஏற்படத் தொடங்கி விட்டது. இது தற்செயலான ஒன்றல்ல. ஏற்கனவே தென்னிந்திய அரசர்களின் படையெடுப்பால் சிங்கள இனத்திற்-கும், பௌத்தமதத்திற்கும், ஏற்பட்ட இழப்புக்களையும், அழிவுகளையும், மகாவம்ச நூல் மிகைப் படுத்தியுள்ளது. அத்துடன் எல்லாளன்-துட்டகைமுனு அரசர்களின் சண்டையை, இலங்கையின் சிங்கள சரித்திர ஆசிரியர்கள், சிங்கள மக்களுக்கு சிங்களவர்-தமிழர் சண்டையாகவே சொல்லிக் கொடுத்து வருகின்றனர்.

1927ல் டொனமூர் ஆணைக்குழு இலங்கை மக்களுக்கு வாக்குரிமை கொடுப்பது பற்றி தீர்மானித்தது. இச் சமயத்தில் மலையக மக்களுக்கும் வாக்குரிமை வழங்குவது சம்பந்தமான வாதப் பிரதி வாதங்கள் ஆரம்பமாகியது. இச்சந்தர்ப்-பத்தில், இடதுசாரித் தலைவர்களுடன் ஏ.ஈ. குணசிங்கா போன்ற ஓரிரு சிங்களத் தலைவர்களைத் தவிர; ஏனைய பெரும் சிங்களத் தலைவர்களும் மலையக மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்படுவதற்கு எதிராகவே செயல்பட்டனர். இவ்வெதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் டொனமூர் குழு கீழ்க்கண்ட தகைமைகளின் அடிப்படையில் வாக்குரிமைச் சட்டம் அமைக்கப்பட்டது.

« இலங்கையைத் தாயகமாகக் கொண்டோர், அல்லது 5 வருடங்கள் வாழ்ந்து கல்வி. சொத்து வருமானத் தன்மை கொண்டோர், அல்லது 5 வருடங்கள் தொடர்ச்சியாக வசித்து மேலும் நிலையாக வசிக்கும் நோக்குடையோருக்கு கொடுக்கப்பட்ட

www.tamilarangam.net

நிலையான குடியிருப்புச் சான்றிதழ் கொண்டோர் என்போருக்கு வாக்குரிமை வழங்கியதால்>>

இதனடிப்படையில் மலையக மக்களும் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றனர். 1931இல் நடைபெற்ற முதலாவது தேர்தலிலும், 1936இல் நடைபெற்ற தேர்தலிலும் இரண்டு பிரதிநிதிகளும் 1947இல் 7 பிரதிநிதிகளும் பாராளுமன்றம் சென்றனர். அத்துடன் இத் தேர்தல்களில் மலையகப் பிரதிநிதிகள் போட்டியிடாத தொகுதிகளில் மலையக மக்கள் இடதுசாரிக் கட்சிகளையே ஆதரித்தனர். இதனால் 47இல் இடதுசாரிகள் மலையக மக்களின் ஆதரவுடன் பெரும் வெற்றிகளைப் பெற்றனர். மேலும் இதனையொத்த காலப்பகுதிகளில் தொழிற் சங்க இயக்கங்களும் ஆரம்பிக்கப்பட்டு அதனூடே பொருளாதார - சம்பளக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வேலைநிறுத்தங்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. 1939 - 40ம் ஆண்டுகளில் மலையக மக்கள் தோட்ட நிர்வாகங்களையும், அரசையும் திணறவைக்கும் வகையில் வேலைநிறுத்தப் போராட்டங்களையும் கிளர்ச்சிகளையும் செய்தனர். 1947ல் இலங்கை முழுவதிலும் நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்திலும் முழுமூச்சுடன் பங்கு கொண்டனர்.

1948இல் மலையக மக்கள் வாக்குரிமையற்றவர்களாகவும், நாடற்றவர்களாகவும் ஆக்கப்பட்டனர். மலையக மக்களை இலங்கையின் தேசிய அரசியல் வாழ்விலிருந்து அந்நியமாக்குவதற்காக யூ.என்.பி யால் எடுக்கப்பட்ட நடவடிக்கை இதுவாகும்.

மலையக மக்கள் வாக்குரிமை- குடியுரிமை

www.tamilarangam.net

அற்றவர்களாக ஆக்கப்பட்ட பின்பு அவர்களுக்கு அடுத்ததொரு பிரச்சினை ஆரம்பமாகியது. இது நாடற்றவர்கள் என்ற பிரச்சினையாகும். இப்பிரச்சினையைத் தீர்க்கப் போவதாக கூறி இலங்கை இந்திய அரசாங்கங்கள் காலத்திற்கு காலம் சில ஒப்பந்தங்களைச் செய்தன. அதுவே சிறிமா- சாஸ்திரி, சிறிமா- இந்திரா ஒப்பந்தங்களாகும். 1964ல் மலையக மக்களின் எண்ணிக்கை 9¼ லட்சமாகும். இதில் 5¼ லட்சம் பேரை இந்தியாவிற்கு அனுப்புவது என்றும் 3லட்சம் பேரை இலங்கை ஏற்றுக்கொள்வது என்றும் மிகுதி 1லட்சம் மக்கள் குறித்து பிறிதொரு சந்தர்ப்பத்தில் முடிவுக்கு வருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. 1974ல் இவ் ஒருலட்சம் மக்களையும் அரை, அரைவாசியாக இரு நாடுகளும் பகிர்ந்து கொள்வதென சிறிமாவும், இந்திராவும், தீர்மானித்தனர்.

நாடற்றோர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை- இந்திய அரசாங்கங்களால் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் இரு நாடுகளுக்கிடையில் பண்டங்களைப் பரிமாற்றும் வர்த்தக ஒப்பந்தங்கள் போல் இருந்தனவே அன்றி, ஒரு சமுதாயத்தில் வாழும் மக்களுக்காக செய்யப்பட்டதற்கான அறிகுறிகள் இல்லை. இந்தியா ஏற்றுக் கொள்வதாக உடன்பட்ட 5¼ லட்சம் மக்களின் வெளியேற்றம் மக்கள் விருப்பத்தின் பெயரில் செய்யப்படவில்லை. ஒரு குடும்பத்தில் 5 அங்கத்தவர் இருந்தால் அதில் தகப்பனும் இருபிள்ளைகளும் இலங்கையிலிருக்க, மற்றைய தாயும் ஒரு பிள்ளையும் உறவு துண்டித்த நிலையில், இந்தியா செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் மலையகத்தின் பெரும்பாலானவர்களுக்கு ஏற்பட்டது. இந்தியா புறப்படும் போது தலைமன்னார் துறைமுகத்தில் ஒரு குடும்பத்தின் தாயும் பிள்ளையும் கதறியழும். தகப்பனும்

www.tamilarangam.net

ஏனைய பிள்ளைகளும் கரையிலும் நின்று நாம் எதிர்காலத்தில் எப்போ சந்திப்போம் எனக் கூக்குரலிட்டு கதறி அழுது சென்றனர். இவ் அவலத்தின் மத்தியிலும் இந்தியா சென்றும் மலையக மக்கள் தமிழகத்திலும் அவல வாழ்க்கையையே வாழ்கின்றனர். இதையடுத்து 1987ல் செய்து கொள்ளப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கூட (ஜே. ஆர். ராஜீவ்) மலையக மக்களைப்பற்றி எதுவுமே குறிக்கப்படவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும்.

மலையக மக்கள் குடியுரிமை வாக்குரிமை இழந்து நாடற்றோர் ஆனதால், தோட்டத் தொழிற்துறை தவிர்ந்த ஏனைய அரசாங்க கூட்டுத்தாபன - தனியார்துறைகளின் வேலைவாய்ப்பு பெற தடையாளர்களாக்கப்பட்டனர். இதேபோல் திட்டமிட்ட முறையில் கல்வி வசதியும் புறக்கணிக்கப்பட்டது.

மலையக மக்கள் இலங்கையின் அரசியல் வாழ்வில் இருந்து அந்நியமாக்கப்படும் நாட்டின் ஏனைய மக்களுக்கும் உள்ள சமூக பொருளாதார அந்தஸ்த்து இன்றியும் ஒதுக்கப்பட்ட சமுதாயமாக ஆக்கப்பட்டதற்குமான காரணகர்த்தாக்கள் பிரித்தானிய காலனித்துவமும், சிங்கள பௌத்த அரசுகளால் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுமேயாகும்.

பௌத்த அரசுகளின் இந்நடவடிக்கைகளுக்கு எதிராக இலங்கையின் பெரும்பாலான அரசியல் கட்சிகள் பாராளுமன்றத்தில் சம்பிரதாய எதிர்ப்புக்களையும் பேச்சுக்களையும் நடாத்தினார்களே அன்றி, மக்கள் மத்தியிலான போராட்ட இயக்கங்களை முன்னெடுக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். தமிழரசுக்கட்சி அதன் ஆரம்ப காலத்தில் மலையக மக்கள் மீது கொண்டிருந்த 'அக்கறை' பிற்காலத்தில்

www.tamilarangam.net

அற்றுப் போய்விட்டது. பாராளுமன்ற இடதுசாரிக்கட்சிகளின்-
-நிலையும் இதுவே. இச்சந்தர்ப்பத்தில் தொண்டமான் தான் மலையக
மக்களின் உரிமைகளுக்காக போராடுவதாகக் காட்டிக்
கொண்டு ஏதும் மலையகத்தில் மிகப் பெரும்பான்மையான
தோட்டத் தொழிலாளர்களை இ.தொ.காங்கிரஸில் இணைய-
-வைத்தது. இதன் மூலம் மலையகத் தோட்டத் தொழிலாளர்களை
தொண்டமான் தொடர்ந்து தொழிற்சங்கம் என்ற
வட்டத்திற்குள்ளேயே வைத்து வந்திருக்கின்றார். கடந்த
காலங்களில் சம்பள உயர்வு கேட்டு தொழிற்சங்கங்கள் வேலை
நிறுத்தங்களைச் செய்யும் போது அச்சமயத்தில் தோட்டத்
தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காக வேலை நிறுத்தங்களை
நடத்தியதைத் தவிர மலையகமக்கள் இழந்த அடிப்படை
உரிமைகளைப் பெறுவதற்கோ அல்லது அவர்கள் இழந்த சமூக
அந்தஸ்தைப் பெறுவதற்கோ அரசியல் போராட்ட இயக்கங்களை
முன்னெடுக்கவில்லை. மொத்தத்தில் தொழிற்சங்க ரீதியாக
அரசியல் வியாபாரத்தையே நடத்தினார். இதன் மூலம்
பெரும் தொகைப் பணத்தை சந்தாவாக இ.தொ.காங்-
கிரஸ் பெற்றுக் கொண்டு இருக்கிறது. தோட்டத்-
-தொழிலாளர்கள், மாதாந்த சம்பளத்தை பெறுவதற்கு
முன்பாக தோட்ட நிர்வாகங்களிலிருந்து இ.தொ.
காங்கிரஸிற்கு இப்பணம் போய்ச் சேர்ந்து விடும்.
கடந்த வருடம் மலையக மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்
படுவதற்கான சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்
பட்டது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின் அதில்
சொல்லப்பட்ட விடயங்கள் எவ்வளவு தூரம் நடைமுறைச்
சாத்தியமாகியுள்ளது என்பது கேள்விக்குரிய தொன்றாகும்.

www.tamilarangam.net

மேற்படி சட்டத்தை அரசு கொண்டு வந்ததற்கு இ.தொ.காவின் பிரார்த்தனை இயக்கமே காரணம் எனத் தொண்டமான் கூறியுள்ளார். அத்துடன் வடபகுதி மக்கள் படித்தவர்கள் அவர்கள் மத்தியிலுள்ள இயக்கங்கள் ஆயுதமேந்தி போராட்டத்தை நடாத்தியும் அதன் மூலம் எதுவுமே சாதிக்கவில்லை. அதேவேளை மலையக மக்கள் பிரார்த்தனை இயக்கம் மூலம் பிரஜாவுரிமையை வென்றெடுத்துள்ளனர் எனவும் கூறியுள்ளார். இக்கூற்றின் உள்ளார்ந்த அர்த்தம் ஆயுதப் போராட்டத்தின் மூலம் எதுவுமே சாதிக்க முடியாது என்ற கருத்தை மலையக மக்கள் மத்தியில் தோற்றுவித்து அவர்களை பிரார்த்தனை இயக்கத்தின் மேல் நம்பிக்கையூட்ட வைக்கும் கபட நோக்கமே. தொடர்ந்தும் இவ்வியக்கத்தை முன்னெடுப்பதற்கு அதன் மகிமை பற்றியும் பக்தி பரவச அறவுடனான விதிமுறைகள் பற்றியும் கதாப்பிரசங்கம் செய்துள்ளார்.

பிரஜாவுரிமைச் சட்டத்தை யூ.என்.பி அரசு கொண்டு வந்ததற்கு பிரார்த்தனை இயக்கம் காரணமல்ல என்பது பொதுவாக எல்லோரும் அறிந்த விடயம். இது தொண்டமானுக்கும் புரியாத ஒன்றல்ல. ஆனால் அரசு இச்சட்டத்தை கொண்டு வந்ததன் நோக்கம், வடக்கு கிழக்கு மக்கள் மத்தியில் நடந்துவரும் போராட்டங்களும் தமிழ் இளைஞர் இயக்கங்கள் சில மலையகத்தில் ஊடுருவிய நிலைமையும் மலையக மக்கள் மத்தியில் ஓர் உத்வேக உணர்வைக் கொடுத்தது. இதன் மூலம் வடக்கு கிழக்கு நிலைமைகள் மலையகத்திற்கு வந்துவிடும் என்ற அச்சமே. இத்துடன் தொண்டமான் தமிழ் மக்களுக்கு உதவி

www.tamilarangam.net

ஆய்பவர் போலவும் இளைஞர் இயக்கங்களுக்கு ஆதரவு
கொடுப்பவர் போலவும் காட்டிக் கொண்ட தன்மை
இலங்கையின் அண்மைக்கால அரசியலில் தமிழ் மக்கள் மத்தி-
-யில் தொண்டமான் தான் ஒர் 'நடுநிலையாளனாகவும்' தானே
போலவும் நடந்து கொண்டு அநேக விடயங்களில் தான்
ஒர் இலங்கைப் பிரஜை என்ற நினைவினூடு. இந்தியப்
பிரதிநிதி போல் நடந்து கொண்ட போக்கும் இதனடிப்படை-
-யில் மலையகத்திற்கு பாதுகாப்பில்லை என்ற தோரணையில்
இந்தியப் படையை மலையகத்திற்கு அழைக்கலாம் எனஅரசு
அஞ்சிய ஒர் நிலையிலும் பிரஜாவுரிமைச் சட்டத்தைக்-
கொண்டு வந்தது. இதற்கு பின்னரும் நிலையும் சாதகமாக
இருந்தது. 1911 முதல் 1964 வரை மலையகத் தமிழர்களே
சிங்கள மக்களுக்கு அடுத்த பெரும்பான்மையினராக பூர்வீகத்
தமிழரைவிட அதிக எண்ணிக்கையினராக இருந்து வந்துள்-
-ளனர். 1953ல் இவர்கள் இலங்கையின் மொத்த சனத்
தொகையில் 12 வீதமாக இருந்தனர். 1981ல் இவர்களின்
எண்ணிக்கை (ஒப்பந்தங்கள் மூலம் நாடுகடத்தப்பட்டதால்)
நான்காம் இடத்திற்கு தள்ளப்பட்டது.

மலையக மக்கள் அண்மைக்காலம்
வரை தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காக தொழிற்சங்க
இயக்கங்கள் மூலமே போராட்டங்களை முன்னெடுத்தனர்.
தொழிற் சங்க இயக்கப் போராட்டங்கள் வேலைநிறுத்தத்தை
அடிப்படையாகக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட போராட்-
-டங்களாகவே அமைந்தது. தொழிற் சங்க இயக்கப் போராட்-
-டங்கள் மூலம் மலையக மக்களின் முழுப்பிரச்சினைகளையும்
தீர்க்க முடியாது. மலையக மக்களின் உரிமைகள் அரசியல்

www.tamilarangam.net

-போராட்டங்களுடே முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்-கான அரசியல் இயக்கம் மலையக மக்களுக்குத் தேவை. இத் தேவையின் அடிப்படையில் கீழ்க்காணும் விடயங்க-ளுக்குத் தீர்வுகள் தேடல்கள் முடிவுகள் என்பன தேவை.

மலையக மக்கள் ஓர் தேசிய இனமா? என்ற பிரச்சினைக்கு முதலில் முடிவு காணப்பட வேண்டும்; வட கிழக்கு தமிழ் மக்களுக்கும் மலையக மக்களுக்குமிடையே உள்ள நலிந்த உறவுகள் பற்றியும் தொண்டமானின் ஆதிக்கம் தொண்டமானை மீறிய ஜே.வி.பி. பாஸிசம் போன்றவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இவற்றின் அடிப்படையில் மலையக மக்கள் பற்றிய நிலைப்பாடுகள் தீர்வுகள் என்பன எடுக்கப்பட வேண்டும்.

இப்பாரிய பொறுப்பு சமுதாய மாற்றத்தை விரும்பும் ஒவ்வொருவரின் மேலும் சுமத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் வடக்கு-கிழக்கின் பாஸிச நிலைமைகளும் தென்னிலங்கையிலே வளர்ந்து வரும் பாஸிச நிலைமைகளும் மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாகவே உள்ளது. இன்று ஜே.வீ.பி. இன் «பாஸிச» பிரதேசங்களில் சண்டையும் அதிகரித்துள்ளதாக தெரிகிறது. இந்நிலைமையைப் பார்க்கும் போது மலையகம் தொண்டமானின் கையிலிருந்து ஜே.வீ.பியின் பாஸிசப் பிடியில் விழுத்தப்படுமா? என்ற கேள்வியும் எழுகின்றது. இந்நிலையில் இலங்கை அரசால் ஜே.வீ.பி.யின் மலையக நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியாமல் போகுமானால் தொண்டமானின் ஆதரவுடன் இந்தியப்படை மலையகத்தை ஆக்கிரமிக்கும் சாத்தியப்பாடுகளும் காணப்படுகி-ன்றது.

—நிர்மாணன்

www.tamilarangam.net

# தமிழ் அகதிகள் மீது பாயும் புதிய நாஜிகள்




ஐரோப்பிய தமிழ் அகதிகள் இன்று ஒரு புதிய நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். புதிய நாஜிகளினதும் [Neonazi] அதிதீவிர வலதுசாரிகளினதும் வளர்ச்சி இன்று அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

சுவிற்சர்லாந்தில் பல்வேறுபட்ட புதிய நாஜிக் குழுக்கள் உருவாகியுள்ளன. இவற்றுள் முக்கியமாக நான்கு புதிய நாஜிகள் குழுக்கள் உள்ளன.

1. PF Patriotische Front [தாய்நாட்டு முன்னணி] இது சுவிற்சர்லாந்தின் அனைத்துப் பகுதிகளிலும் செயற்பட்டு வருகின்றது.

2. NF- Neue Front [புதிய முன்னணி] இது Winterthur, Zürich, Baden, Bern, Schaffhausen, Bülach போன்ற பகுதிகளில் இயங்கி வருகின்றது

3) NPS. National revolutionäre Partei
சுவிற்சர்லாந்து தேசிய புரட்சிகரக் கட்சி

4) WJ- Wikung Jugend

www.tamilarangam.net

மேற்கூறிய மூன்று இயக்கமும் இக்குழுவின் அங்கம் வகிக்கின்றனர். மேலும் இக்குழு பாசிஸப்புத்தகங்களை வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

PF இன் பேச்சாளர்களான 40 வயதுடைய Marcel Strebel [சாரதி] 25 வயதுடைய Otto Rölli [விவசாயி] இவர்கள் தம்மைப்பற்றி தெரிவிக்கையில் «ஜேர்மனில் இருக்கும் "புதிய சோசலிஸ்ட்டுக்கள்" போலவும் அமெரிக்காவிலிருக்கும் Ku Kux Klan [அமெரிக்காவிலுள்ள புதிய நாஜிகள்]

போலவும் நாம் இருந்தாலும், நாங்கள் நாஜிகள் அல்ல. மாறாக தேசிய வாதிகள்» என தெரிவித்துள்ளனர். தமது போராட்டம் அகதிகளுக்கு எதிரானதும், வெளிநாட்டவர்களிற்கு எதிரானதும் கம்யூனிசத்திற்கு எதிரானதுமான தமது பிரசாரங்களை வெளியிடுவது என குறிப்பிட்டுள்ளனர்.

NPS ஆனது 89ம் ஆண்டு மார்ச்மாதம் பல்வேறுபட்ட குழுக்களை இணைத்து உருவாக்கப்பட்டது. இக்குழு Bülach Schauffhausen போன்ற இடங்களில் தேர்தலில் நிற்கப்போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

NF தமது நடுநிலையாக இருப்பதாகவும் தமக்கும் ஜேர்மனியில் இருக்கும் புதிய நாஜிகளான FAP [Freiheitlicher Deutshen Arbeit Partei - சுதந்திர ஜேர்மனிய தொழில்கட்சி] யுடன் தொடர்பு இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். இக்குழு சென்ற வருடம் நவம்பர் மாதம் ஒன்று கூடியபோது உருவாக்கப்

www.tamilarangam.net

பட்டதாக Munsingen [Bern] இல் இருக்கும் மின்சாரத் திருத்தினார் அவர் தெரிவித்துள்ளார். அவர்கள் «Die Kameradschaft [நட்புறவு]» என்ற பத்திரிகை யொன்றை வெளியிடுகின்றார்கள். இப்பத்திரிகை ஜேர்மனியிலிருக்கும் FAP நம்மை ஆதரவு இயக்கம் என அறிவித்துள்ளதாகவும், நாசிகாலத்தில் ஓர் யுத -க்குற்றம் Holland இல் உயிரைப்பாதுகாப்பதற்காக மறைந்திருந்ததாகவும் இச் சம்பவம் பற்றி ஓர் நாவல் வெளியாகி இருந்தது இந்நாவல் நாடகமாக மேடை யேற்றியபோது NF இடி இடிப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டதிலையும் -FAP வரவேற்றுள்ளதாகவும் இதில் விட்டுள்ளது.



தகவல்: BERNER ZEITUNG 30.5.89

இவ்வகையான புதிய நாசிகளின் இருந்திருந்த கோசங்கள் சுவிற்சர்லாந்து சுவிஸ் நாட்டவர்களுக்குரியதே. «வெளிநாட்டவரே உங்கள் நாடுகளுக்கு திரும்பிப்போ தமிழனை வெளியேறு யூதர்களே இஸ்ரேலுக்கு திரும்பிப்போ அங்கு உங்களுக்கு போதிய இடம் உண்டு»

இக்குழுக்கள் அனைத்தும் முன்னு மாதத்திற்கு ஒருமுறை தேசிய ஒருங்கிணைப்புக்குழு [Nationalen Kordination]-[N.K] வில் கூடுவது வழமை. இத்தேசிய ஒருங்கிணைப்புக் குழு [NK] 1982ல் ஆண்டு உருவாக்கப்பட்டது. இவ் ஒருங்கிணைப்பில் சுவி-ற்சர்லாந்து இன வெறிக்கட்சியான 'National AktionPartei'

www.tamilarangam.net

(NA) உம் அங்கம் வகிக்கின்றது. இவ் இயக்கத்தினையின் உயர்மட்டக் குழுவில் 62 வயதுடைய 'Gaston Armand' என்ற பழைய பாசிஸ்டும் அங்கம் வகிக்கின்றான். [இவன் ஸ்பானிய சர்வாதிகார ஆட்சிக்கு சார்பாக இருபது -ம் ஆண்டு போராடியவன்] இவ் இயக்கத்தினைப்பு மகாநாடு சுவிஸ் இல் உள்ள Freiburg இல் வழமையாக நடை பெற்று வருகின்றது. மேற்கூறிய புதிய நாஜிகளின் கருத்துக்களை உத்தியோகபூர்வமாக NA கட்சி பிரதிபலிப்பு செய்கின்றது. NA யினது செயற்குழு அங்கத்தவரின் தபால் பெட்டி இலக்க தேசிய குழு இணைப்பு குழுவிற்கு பயன்படுத்தப்படுகிறது.

இவ்வருட மே மாதம் கடைசி வாரத்தில் Kanton Zug இல் உள்ள தமிழர் வீடு தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. இத்தாக்குதலில் ஓர் தமிழர் படுகாயமுற்று - வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சுவிற்சலாந்திலுள்ள புதிய நாஜிகள் சிலர்களும் அதி தீவிர வலது சாரிகளும் மேலும் மேற்கு ஜேர்மனியிலுள்ள புதிய நாஜிகளுமாக நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களைக் கொண்ட விருந்துபசார விழாவினை PF ஒழுங்கு செய்திருந்தது. இவ்விழா Kanton Zug இல் உள்ள Red Cross மண்டபத்தில் நடை பெற்றது. இவ் விழாவில் கலந்து கொண்ட 20 மொட்டையடித்த இராணுவ கவச



Wiking-Jugend e.V.

உடையணிந்தவர்கள் பொலிஸாரிடமிருந்து மிக அண்மையில் தமிழ் அகதிகள் மீது தாக்குதல் மேற்கொண்டனர். இத்தாக்குதலில் புதிய நாசிகளின் விருந்துபசார விழாவிலிருந்து வந்தவர்களே செய்ததாக பல பத்திரிகைகள் அம்பலப்படுத்தியிருந்தன. இரண்டு நாட்களுக்கு பின் Konton zug சேர்ந்த பொலீஸ் தலைமை அதிகாரி 'Josef Rust' பத்திரிகையாளரின் அபிப்பிராயத்திற்கு எதிராக அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தார். அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது; தமிழர் மீதான தாக்குதல் புதிய நாசிகள் மேற்கொள்ளவில்லையெனவும், இது PF இன் பேச்சாளர் தமக்கு உறுதியளித்ததாகவும், இத்தாக்குதல் சாதாரண மேய்ப்பக்காரர் செய்திருப்பதாகவும் தெரிவித்திருந்தார்

இப்பொலீஸ் அதிகாரியின் தகவல் பொய்மையாக்கும் விதத்தில் சம்பவம் நடந்த மூன்று நாட்களின் பின்பு பொலிசாரால் 20 வயதுடைய Daniel Aeberhard என்பவர் கைது செய்யப்பட்டார்.

இவர் PF இன் நிறைவேற்றுக்குழு அங்கத்தவர் என்பது நிச்சயமாகியது. இவரின் வீட்டினை சோதனை செய்த பொலிசாரால் PF இன் பல இனவெறி பிரச்சாரதுண்டுப்பிரசுரங்களும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. மேலும் கைது செய்த ஆயுதங்களில் கொட்டா செய்யும் கருவியும் கைப்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

உம் பகுதி புதிய மாநகர் 'Chur' என்னும் இடத்தில் தமிழர் இருந்த வீடொன்றின் மீது தீவைக்கப்பட்டதும்

பலம் அதைத் தமிழ் அகதிகளையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இச்சம்பவத்தில் இரண்டு இளைஞர்கள் கையிட நான்கு தமிழ் அகதிகள் இருந்துள்ளனர். இக்கோரச் சம்பவத்தின் புதிய நாஜிகளே செய்தார்கள் என்பது இப்புதிய நாஜிகள் 'Chur'இல் மேற்கொண்ட நடவடிக்கைகள் உறுதி செய்வதாக அமைகின்றது.

இச்சம்பவம் நிகழ்வதற்கு மூன்று வாரங்களுக்கு முன்பாக « Anti Tamilen Organisation [தமிழர் எதிர்ப்பியக்கம்] » என உரிமை கோரியும், சுவிற்சர்லாந்து சிலுவை பொறிக்கப்பட்ட துண்டுப்பிரசுரம் பலவாக விநியோகிக்கப்பட்டு இருந்ததும், இதற்கு முன்னரே 'Chur' இல் உள்ள இன்னோர் அகதி முகாமை தீயிட எரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதும் போன்ற சம்பவங்கள்; இவ்விடயத்தில் புதிய நாஜிகள் சம்பந்தப்பட்டதினை உறுதி செய்கின்றது. மேலும் இவ்வகையான தீவைப்பு முயற்சிகள். 'Chur' இலுள்ள இன்னொரு அகதிமுகாமிலே மூன்று முறை நடந்தது. இது போன்று Bern இல் 'Ostermundigen' என்ற இடத்திலும் தீவைப்பு முயற்சி நடந்தது குறிப்பிடத்தக்கது.

இப்புதிய நாஜிகள் இந்நாட்டில் வாழும் ஐரோப்பியர்களுக்கு எதிராக செயற்படவில்லை. மாறாக, வெளிநாட்டவர் என்றபோர்வையில் அந்நிய இனத்தின். அமெரிக்க ஆபிரிக்க-மக்களிற்கெதிராகவே கூடுதலான எதிர்ப்புணர்வை காட்டுகின்றனர். இவர்கள் வளர்வதற்கு ஐரோப்பிய அரசுகளும் காரணமாக அமைகின்றன. வேளையில் நாட்டில் ஏற்படும் முக்கிய நெருக்கடி

www.tamilarangam.net

-கவிந்து வெளிநாட்டவர்களை முக்கிய காரணம் என போலிக்காரணங்களை கூறித் தப்பித்துக் கொள்கின்றனர். இக்காரணங்களை புதிய நாஜிகள் இலகுவாகப் பயன்படுத்தி வருகின்றனர். [தற்போது தமிழ் அகதிகள் மீதான தாக்குதல்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறுகின்றன] இவர்களுக்கெதிரான பிரச்சாரங்களை இடது சாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் இவர்களை விட எண்ணிக்கையில் புதிய நாஜிகள் அதிகமாக உள்ளனர். பிரான்ஸ் நாட்டிலிருக்கும் 'Front National' எனும் புதிய நாஜிகள் கட்சி அங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சியை விட 15% பலம் வாய்ந்ததாக உள்ளது. இவர்கள் வளர்ந்து வரும் போக்கில் தாக்குதல்கள் பரவலாக மேற்கொள்ளப்படலாம்.

இந்நிலையில் ஐரோப்பிய தமிழ் அகதிகள் நிரந்தரமாக வாழலாம் என நினைப்பார்களாயின் அது கற்பனையாகவே அமையும். மேலும் இன்று ஐரோப்பாவில் பிறக்கும் தமிழ் குழந்தைகள் இந்நாடுகளிலேயே கல்விகற்று தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடலாம் என எண்ணுகின்றனர். இவ்வெதிர்பார்ப்பு சாத்தியமற்றதொன்றாகும். இன்று ஐரோப்பிய நாடுகள் தாம் விரும்பாத வேலைகளையே வெளிநாட்டவர் செய்வதற்கு அனுமதி கொடுக்கப்படுகின்றது. இதனால் நாம் அவர்களுடன் தொழில்ரீதியாக போட்டியில் நேரடியாக ஈடுபடவில்லை. மாறாக இங்கு வளர்ந்து வரும் தமிழ்க் குழந்தைகள் எதிர்காலத்தில் இந்நாட்டவர்களின் தொழில் வாய்ப்புகளுடன் போட்டி போடும் போது நாஜிகளின் நடவடிக்கை பன்மடங்காக அதிகரிக்கும். ஒரு நாட்டில் வாழும் சமூகம், அரசியல் உரிமையுமின்றி-

தொடர்-பக். 41ல்......

www.tamilarangam.net

# ஓடிப்போன சகோதரர்க்கு!

ஓடி விட்டான்!
நீ யாருடனோ
ஓடி விட்டாயாம்.
சொந்தங்கள் இங்கு
தகவல் சொன்னார்.

ஆனால், நீ
விடுதலைக் கென சுதந்திரமாய்
பறந்தாய்!
பாசறைகள்
கொலை கூடாரமாக
மாறியதால்,

சுதந்திர காற்றை
சுவாசிக்க வெளியேறினாய்!
நடந்த பாதையில்
நல்லதும் கெட்டதும்,
என்னதான் இருப்பினும்;
நல்லதை கற்றுதந்தாய்
நன்றி சொல்ல வேண்டும்
அரசியல் வாழ்விற்கு!

www.tamilarangam.net

வீட்டாரின் விலக்கில்
சுற்றத்தின் சொல் அம்பு,
அடக்கப் பார்த்தது
அசையவில்லை நீ.

மரணத்துள் வாழும் மண்ணு
இன்னும்
வீரத்தை விதைத்திருக்கும்!

வழித் துணையாய் வந்தவனை
வாழ்க்கைத் துணையாக்கினாய்
காதலுக்கு கண்ணில்லை
யார் சொன்னார்!
உண்மைக் காதலுக்கு
உறுதியான பார்வையுண்டு!

ஆயினும்
உறவுகள் உனக்கு
வைத்த பெயர்
உதவாக்கரை

திரும்பிப் பார்க்கிறேன்
இங்குள்ள சொந்தங்களை
என்னையும் தான்;

வெடிச்சத்தம் கேட்டு
கொல்லை வழியாக
எல்லை தாண்டிய
'வீரர்' இவர்!

விடுதலைக் குதியில்
வியாபார நீச்சலடிக்கப்
புறப்பட்டாலும்
வீம்புகள் குறையவில்லை!

அதனால்,
இவர்க்கு உனது செயல்
வெறும் வாயில் அவல்!

ஒன்று மட்டும் உறுதி
சகோதரியே!
சமூகத்தின்
சல்லடைக் கண்களில்
நீ 'ஓடிப்போனவள்'
நாளைய சந்ததிக்கு
நீ ஓர் முன்னோடி!

சு. கலாதரன்

www.tamilarangam.net

# ஓ! ஆக்கிரமிப்பாளர்களே...!

இப்போதும் நீங்கள் ------

இல்லை! இன்னும் இன்னும் வெறித்தனமாக

நீங்களும்

உங்கள் --- 'கரங்களும்'

உங்கள் வருகையால்

கண்ணீரை ஒற்றிவிட்டு

விழிகளில் குத்தினீர்கள்.

எதிர்பார்ப்புகள் எல்லாம்

அப்பாவித்தனத்தின் பிரசவங்களாகி

மழுந்து போயின.

வாழ்வின் நரம்புகளை

அறுத்தவர்கள்

நீங்கள் மட்டுமில்லை என்பதால்தான்

குமுறும் உணர்வுகள்

ரத்தப் பழியின்கீழ்

மௌனித்தன.

புரிந்து கொள்ளுங்கள்!

பூமியைப் பிளந்து எழும்

முளைப்புகளின் வலிமையறியா

நீங்களும்

நம்பிக்கையுடன் இருக்கும்

நாங்களுமாய்

கருவுற்றிருக்கிறது

எமது தேசம்!